CHARTERED ACCOUNTANCY
CAB II ENGLISH MEDIUM STARTED ON 09.02.2013
VEAL BUSINESS COLLEGE
ADMISSION STILL OPEN
CONTACT : 0777 555 738

மாசி மாதம் 18ம் திகதி

March 02, 2013

# மலைமுரசு®

MALAIMURASU

அறைவு 01 இயம் 32

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

## "ஹலால்" பொறுப்பு அரசிடம் வீழ்ந்தது

ஹலால் சான்றிதழை வழங்கும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அகில இலங்கை ஜம்மியத்துள் உலமா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (7ம் பக்கம்)

## காயமடைந்த மீனவரை மீட்டது கடற்படை

கடலில் காயமடைந்த மீனவரை மீட்டது இலங்கை கடற்படையின் கிழக்குப் பிரிவு. கடற்றொழில் நீரியல்வளத்திணைக்களத்தின் வேண்டுகோளினை அடுத்து கிழக்குக் கடற்படைத் தலைமையகம் P-475 எனும் மீட்புப் படகில் இம் மீனவரைக் கரை சேர்த்துள்ளது.

கடந்த 17ம் திகதி கடற்பரப்பிலிருந்து.. (7ம் பக்கம்)

## மறைத்து வைக்கப்பட்ட வெடிப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன

தகவலொன்றின் பேரில் கிண்ணியா பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட கிண்ணியா கடற்படையினர் உப்பாறு பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவு வெடிப்பொருட்களைக் கண்டு மீட்டுள்ளனர். (7ம் பக்கம்)


## தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

**– இறுதித்திகதி 15.03.2013 –**

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஆசிரியப் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளன. 01.01.2013ம் திகதி (7ம் பக்கம்)

புறாமலையில் உல்லாச விடுதி ...

# திருமலையின் தேசியப் பூங்கா தனியார் வசப்படுமா?



(7ம் பக்கம்)

# கோணேசர் கோவில் ஆசாரியர்கள் கைதாகி விடுதலை!!

திருக்கோணேச்சரர் ஆலயக் கட்டுமாணம் மற்றும் புனர் நிர்மாணப்பணிகளில் ஈடுபட்டிருந்த ஆசாரியர்கள் எழுவர் திருமலைக் காவல் துறையினரால் கைதாகி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் சிவராத்திரி விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடும் முகமாக நிர்மாணப் புனருத்தாரணப் பணிகளுக்காக நிலத்தினை அகழ்ந்தது தொல்பொருட்துறைச் சட்டப்படி குற்றம் எனத் தெரிவித்துக் கைது செய்யப்பட்ட இவர்கள் பின்னர் குற்றமற்றவர்கள் என விடுவிக்கப் பட்டுள்ளனர்.

## பீப்பிள்ஸ் பினான்ஸ் பிஎல்சி பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சியுடன் இணைந்தது

மக்கள் வங்கியின் சேய்க்கம்பனிகளுடன் ஒன்றான பீப்பிள்ஸ் பினான்ஸ் பிஎல்சி.. (7ம் பக்கம்)

## கிழக்கில் மாவட்டம் ஒன்றிற்கு 450 ஆசிரியர்கள் நியமனம் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் –10000–

கிழக்கில் வெற்றிடங்கள் நிழவும் பாடசாலைகளுக்கு தமிழ் மற்றும் சிங்கள மொழி மூல ஆசிரியர்கள் சேர்த்துக்கொள்ளப் படவுள்ளதாக கிழக்கின் ஆளுனர் தெரிவித்துள்ளார். (7ம் பக்கம்)

## குமரக்கடவையில் மூன்றரை வயதுச் சிறுமியைப் பலாத்காரம் செய்த –10 வயதுச் சிறுவன்–

திருமலை குமரக்கடவைப் பிரதேசத்தில் (கோமரன் கடவல) மூன்றரை வயதுடைய அயல்வீட்டுச் சிறுமியை பலாத்காரம் செய்த சந்தேகத்தில் பத்து வயதுச் சிறுவன் கைதாகியுள்ளார்.. (7ம் பக்கம்)

## குவைத்தில் வாகன விபத்து

**– தோப்பூர் இளைஞன் பலி –**

குவைத்தின் ஜஹ்றா நகரின் பெருந்தெருவில் நிகழ்ந்த மகிழுந்து விபத்தில் இலங்கையின் திருமலை மாவட்ட தோப்பூர் பிரதேச இளைஞன் ஒருவனும் அவருடன் பயணம் செய்த இந்திய கேரளா இளைஞன் ஒருவனும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக... (7ம் பக்கம்)

From March 04, 2013

Chartered Accountancy Full Time Course

"To be the most sought after Professional Qualification for Business Leaders"

CAB - I Full Time — Time Table: 9:00 - 12:00 Monday Tuesday & Wednesday

CAB - II Part Time — Time Table: Saturday, Sunday & Poyaday



Veal Business College. No 159A, Sea View Road, Trincomalee. 0777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !

### உண்மை காலம் கடந்தும் உயித்திருக்கும் !!!

புத்த பகவானின் சிந்தனை யொன்றைத் திடீரென மீட்டக் கிடைத்தது. அவரது கருத்துப்படி உலகில் மூன்று விடயங்களை மறைத்து வைக்க முடியாது. அவை முறையே சூரியன், சந்திரன் என்ற மனிதச் சக்திக்கு அப்பாற்பட்ட இரண்டும் மற்றையது மனிதச் சக்திக்குட்பட்ட ஆனால் மனிதனாலும் மறைத்து வைக்க முடியாத உண்மை என்பதும் ஆகும்.

உண்மையை நாங்கள் மறைக்க முயற்சிப்பது என்னவோ எல்லா மட்டத்திலும் நடந்து வருகின்றது தான். ஆனால் உண்மை என்னவெனில் உண்மையை மறைக்க மறைக்க அதன் பரிமாணம் பெருத்துப் பெருத்துப் பெரிதாகி ஓர் நாள் எம் கைதாண்டிப் போய்விடும் என்பதால் தான் நான் மேலே குறிப்பிட்டேன்: உண்மை மனிதச் சக்திக்கு உட்பட்டது ஆனால் மனிதனால் அதனை மறைத்து வைக்க முடியாது என்று.

2012ம் ஆண்டின் உலகச் சரிதத்தின் மனிதவுரிமைகள் மிகவும் மீறப்பட்ட நாடாக இலங்கை தனது பெயரைப் பதிந்துள்ளது என்று நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதர் எரிக் சொல்ஹெய்ம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் வரலாற்றில் இப்படியொரு நாட்டின் மீது குறுங்காலத்தினுள் வசைபாடப் படவில்லை என்று ஆய்வாளர்கள் பலர் தெரிவித்துள்ளனர்.

இதற்கெல்லாம் அடிப்படையாக இருப்பது என்ன என்று பார்ப்போமானால் அது நடந்த உண்மைகளை வெறும் வாய் வார்த்தைகளால் மறைக்க முற்படுவதே ஆகும். மூன்று வருடத்திற்கு முன் இலங்கையின் சனாதிபதி தனது போர் வெற்றியுரையைப் பாராளுமன்றில் நிகழ்த்திய போது அவரது முக்கிய வாசகம் ஒன்று "எமது படைவீரர்கள் ஆயுதத்தை ஒரு கையிலும் மனிதவுரிமைச் சாசனத்தை மறுகையிலும் ஏந்திக்கொண்டே போர் புரிந்தார்கள்" என்று தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் நடந்தவைகள் எல்லோருக்கும் தெரியும் தானே. இன்று பலபரிமாணம் பெற்று உண்மை பெருத்துப் பூதாகரமாய்ப்போய் உலகெங்கும் வியாபித்து நிற்கின்றது.

அதன் பலனை அனைவரும் தான் அனுபவிக்கப்போகின்றோம்.

"எவனுடைய வீட்டில் மரணமில்லையோ அவனுடைய வீட்டிலிருந்து உப்பைக் கொண்டு வா உனது குழந்தையை உயிர்ப்பித்துத் தருகிறேன் என்று உலகிற்கு மரணத்தைச் சாசுவதம் என உணர்த்திச் சென்ற புத்த பகவானின் போதனையின் பின் மரணித்தவர்கள் கூட உண்மையை மறைக்க முடியாது என்பதை இந்தப் புத்ததேசம் உலகிற்குப் போதனையாய்த் தந்திருக்கின்றது."

பிறப்பிலிருந்து இறப்பு மட்டும் உண்மை வியாபித்திருக்கின்றது என்பது தெரிந்த விடயமே. ஆனால் பிறப்பின் முன்னும் இறப்பின் பின்னும் கூட உண்மை வியாபித்து நிற்கும்.... சூரியனாய்... சந்திரனாய்..... உண்மையாய்....

-ஆசிரியர்-


## "சீனி மீனி" தேசிய வேலைத்திட்டம்

இலங்கை நீரிழிவுச் சங்கம், ரொட்டரி கழகம் மற்றும் மெதடிஸ்த பெண்கள் கல்லூரி ஆகியன இணைந்து நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையான "சீனி மீனி" தேசிய வேலைத்திட்டம் ஒன்றை நடாத்தியது. நீரிழிவு நோய் சம்பந்தமாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக மேற்கொள்ளப்பட்ட இவ் வேலைத்திட்டத்தில் இளம் பிள்ளைகளின் நீரிழிவு அபாயம் தொடர்பாகவும் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு வந்தன. பாடசாலை மட்டத்தில், அயல் பாடசாலை மட்டத்தில், மற்றும் நீரிழிவு நோயாளர்கள் மத்தியில் இவ் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி முன்னின்று செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலும் இவ்வேலைத்திட்டத்தில் இலங்கை வங்கியின் அனுசரனையுடன் 21.02.2013 வியாழனன்று நகரில் நடை பவனியொன்றும் இடம்பெற்றது.



## அதிகரிக்கும் காட்டு யானைகளின் அட்டகாசம்

திருக்கோணமலை மாவட்டத்தின் குச்சவெளி, ஜாயா நகர், வடலிக்குளம், சின்னவில்லு, சல்லிமுனை, பல்லவக்குளம் மற்றும் இரணைக்கேணி ஆகிய பகுதிகளில் காட்டு யானைகளின் அட்டகாசம் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாகவும் மக்கள் அச்சமுடன் வாழவேண்டிய நிலை காணப்படுவதாகவும் குறித்த பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.



## புல்மோட்டையில் புதையல் தோண்டியவர்கள் கைது

புல்மோட்டையின் பொன்மலைக்குடாவில் புதையல் தோண்டுவதில் ஈடுபட்ட நால்வரை பொதுமக்கள் கொடுத்த தகவல்களின் அடிப்படையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிசார் கைது செய்துள்ளனர். இந்நபர்கள் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்களையும் பொலிசார் தம்மகப்படுத்தியுள்ளனர்.

## செல்வி கீர்த்திகாவிற்கு புலமைப்பரிசில்

திருக்கோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களுக்கு பரராஜசிங்கம் குடும்பத்தின் நிதி உதவியால் மங்கயைற்கரசி அருமை நாயகம் புலமைப்பரிசில் 2004 இல் இருந்து வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் 2011 இல் பல்கலைக்கழக அனுமதியை பெற்று அப் புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பித்தவர்களில் செல்வி கீர்த்திகா சவுந்தரராஜன் இப்புலமைப்பரிசில் ஊடாக ரூபா 25000ஐ பெற்றுக்கொண்டுள்ளார்.

## றிசானாவின் நினைவாக கவிதைத் தொகுப்பு வெளியீடு

சவூதியில் சிரச்சேதம் செய்யப்பட்ட றிசானா நபீக்கின் நினைவாக "றிசானாவும் எதுவும் பேசா தவாத்மி சுவர்களும்" என்னும் கவிதைத் தொகுப்பொன்று 2013.02.25 திங்கட்கிழமை கிண்ணியாவில் வெளியிடப்பட்டது.

கிண்ணியா பேனா பப்ளிகேஷனின் வெளியீடான இந்நூல் வெளியீட்டு விழாவில் வரவேற்புரையை நூலகர் சபருள்ளாஹானும், தலைமையுரையை தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் ஹபிபுள்ளாவும் ஏற்புரையையும் நன்றியையும் நூலின் தொகுப்பாசிரியர் ஏ.கே. முஜாரத்தும் வழங்கியிருந்தனர். நிகழ்வை கவிஞர் நஸ்புள்ளாஹ் தொகுத்து வழங்கினார்.

## கிழக்கின் முதல்வரைச் சந்தித்தார் த. தே. கூ வின் பொன் செல்வராசா.

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்ட ஈடு வழங்கக் கோரி நடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா கிழக்கு மாகாண முதலமைச்சரை நேரில் சந்தித்துப் பேசியுள்ளார்.

திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் மழையால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, அனர்த்த நிவாரண அமைச்சு மற்றும் மாகாண சபை என்பவற்றினூடாக நட்ட ஈடு வழங்குவதாக கிழக்கின் முதல்வர் உறுதியளித்துள்ளார்.

## நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் 20வது பௌர்ணமி தின நிகழ்வு.

நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டம் நடாத்தி வரும் பௌர்ணமி தின நிகழ்வின் இருபதாவது நிகழ்வு கடந்த 25.02.2013 அன்று தி/பெருந்தெரு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்விலே "நாடெனப்படுவது" எனும் தலைப்பிலான பாவரங்கும் அமரர். சித்தி அமரசிங்கம் மற்றும் வரலாற்றாய்வாளரான அமரர் தம்பிராசா ஆகியோர் பற்றிய நினைவுரைகளும் இடம்பெற்றிருந்தன. இந்நிகழ்வினை தலைமை தாங்கிய நீங்களும் எழுதலாம் கவிதை இதழின் ஆசிரியரும் எழுத்தாளருமான எஸ்.ஆர். தனபால சிங்கம் அவர்களின் தலைமை உரையுடன் நிகழ்வு ஆரம்பமானது.

அதைத்தொடர்ந்து எழுத்தாளர் திருமலை சுந்தா அவர்கள் சித்தி அமரசிங்கம், தம்பிராசா ஆகியோர் பற்றிய நினைவுரையை நடத்தினார். அவர்களுடைய வாழ்வில் இடம்பெற்ற சுவாரஸ்யமான சம்பவங்களும் அவர்கள் கலை இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் ஆற்றிய தொண்டுகளும் அவரது உரையில் நினைவு கூறப்பட்டது. தொடர்ந்து அமரர் சித்தி அமரசிங்கம் பற்றிய நினைவுரையை எழுத்தாளர் தா.பி. சுப்பிரமணியம் அவர்கள் நிகழ்த்தி முடிக்க அடுத்த நிகழ்வாக நாடெனப்படுவது எனும் தலைப்பிலான கவியரங்கு கவிஞர். யோகானந்தன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இக்கவியரங்கில் திருமதி. சந்திரகலா, திரு. செல்வரட்ணம், திரு. காளிராசா, செல்வன். திருச்செந்தூரன், செல்வன். தேனுஷன் முதலானோர் தம் கவிதைகளை வாசித்திருந்தனர். சபையோர் கருத்துரைகளுடன் இந்நிகழ்வு நிறைவடைந்தது.

- பத்மபிரவுன் -

## ஒரு கிராமத்தை சேர்ந்தவர்கள் மட்டும் சம்பூரில் குடியேற அனுமதி

சம்பூரின் நவரெட்ணபுரம் கிராமத்தை சேர்ந்தவர்களை மட்டும் குடியேற அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக மூதூர் பிரதேச இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத் தலைவர் கு. நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் "கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட சம்பூர் பிரதேசத்தில் இருந்து இடம்பெயரந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு குடியேறுவது என்பது தீராத பிரச்சினையாக இருந்து வருகின்றது. இந்த நிலையில், நவரட்ணபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மீண்டும் வந்து குடியேறலாம் என்று அரசு அனுமதித்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சம்பூர் பிரதேசத்திலிருந்து 7 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெயர்ந்த ஆயிரத்து 224 குடும்பங்கள் இன்னும் சொந்தக் காணிகளில் குடியமர்த்தப்படாமல் தற்காலிக முகாம்களிலேயே இருந்துவருகின்றன. தற்போது நவரட்ணபுரம் கிராமத்தில் உள்ள தங்களின் சொந்தக் குடிமனைகளை 7 ஆண்டுகளுக்குப் பின்னர் சென்று பார்க்க சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும் அங்கு தமது குடியிருப்புகள் அழிந்து பற்றைக் காடுகள் மண்டியிருப்பதாகவும் அங்கு சென்று வந்தவர்கள் கூறியுள்ளனர்." என நாகேஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழைத்த தக்கனவும் பிழையாய் இருக்கின்றனவே!

கடந்த வாரம் வரலாற்றைப் பேசுதல் என்ற வி. மைக்கல் கொலினின் கட்டுரை யாருடைய வரலாற்றை மேவிப் பேசியது என்பது பற்றி ஆராய்ந்தேன். (உங்களுக்கும் புரிந்திருக்கும்) அந்த வகையில் அக்கட்டுரை தொடர்பான தொடர்ச்சியான நிலைப்படுத்தல்களை தொடரலாம் என்று நினைக்கின்றேன்.

எனது கட்டுரையின் மையம் கலையிலக்கிய வாதிகளின் ஒற்றுமை பற்றியதாகவும், திருமலையில் ஒரு பொதுமைப்படுத்தப்பட்ட இலக்கிய அமைப்பொன்றின் (தமிழ்ச்சங்கம் போன்றதான) தேவையை உணர்த்தலுமாகத்தான் இருந்தது. இவைபற்றி என்று மேடைகள் ஏறத்தொடங்கினேனோ அன்றிலிருந்து வலியுறுத்தி வருகின்றேன் அதன் ஒரு கட்டமாகத்தான் அக்கட்டுரையும் அமைந்தது. (தோழர்களே என்னைப்பற்றியும் என் இலக்கிய செயற்பாடுகள் பற்றியும் மேலதிகமாக நீங்களே அறிவீர்கள். நான் யார்? என்பதும் உங்களுக்குத் தெரியும் ஆதலால் என்னைப்பற்றி எனது செயற்பாடுகள் பற்றி இம்மியளவும் நான் இயம்பப்போவதில்லை மாற்றாக சொன்னால் ‘‘பிறன்போல் தனக்குத்தானே பூபாளம் பாடத் தேவையில்லை'' அதற்கு ஆசையும், அவசியமும் எனக்கில்லை)

உண்மையில் மைக்கல் கொலின் பொது அமைப்பொன்று வேண்டும் என்று நினைக்கின்றாரா அல்லது இல்லையா என்பதே தெளிவாகத் தெரியவில்லை 20.12.2013 இல் மலைமுரசில் வந்த அவரது கட்டுரையின் 5வது பந்தியில் ‘‘பவித்ரன் சொல்லும் அமைப்பு, அமைப்பு ரீதியான முயற்சி என்பது வெறுமனே சொல்லாடலுக்கும் எழுத்துக்கும் உரியதே ஒழிய நடைமுறைச் சாத்தியமற்றதாகும்'' என்று குறிப்பிடும் கொலினின் வரிகள் அவர் இத்தகைய அமைப்பொன்று தேவையற்றது என கூறுகிறாரா அல்லது அதற்கான முயற்சிகளின் இயலாமை பற்றி இளையவர்களுக்கு வெளிப்படுத்தினாரா தெரியவில்லை. இதே வேளை 16.02.2013 வந்த மிகுதிக் கட்டுரையில் முதலாவது பந்தியில் தாமரைத் தீவான் அவர்களது கௌரவிப்பு நிகழ்வில் நான் தமிழ்ச்சங்கம் பற்றி பேச இருந்ததாகவும் கேணிப்பித்தன் ச. அருளானந்தம் அதுபற்றி பேச வேண்டாமென குறிப்பிட்டதால்தான் பேசவில்லை என்றும் குறிப்பிடுகின்றார். அத்தோடு அண்மைக்காலங்களில் மைக்கல் கொலினின் தொலைபேசி அழைப்புக்கள் திருமலையில் அலறுவதும், அவை தமிழ்சங்க உருவாக்கத்தை அலசுவதும் என் காதுகளுக்கு எட்டிய உறுதிப்படாத தகவல்கள்தான்.

20.12.2012ல் வெளிவந்த கட்டுரையில் பவித்ரன் சொன்ன அமைப்பு, அமைப்பு ரீதியான செயற்பாடுகள் வெறுமனே சொல்லாடலுக்கு உரியது நடைமுறைச் சாத்தியமற்றது என்று குறிப்பிட்டுவிட்டு கொலினின் மேற்கண்ட செயற்பாடுகள் ஒன்றை மட்டும் தான் விட்டுச் செல்கின்றன. தமிழ்ச்சங்கம் அல்லது அது போன்ற பொது அமைப்பொன்று உருவாக்கம் பெற்றால் இன்னுமொரு வரலாற்றைப் பேசுதல் கட்டுரையில் மீண்டும் பூபாளம் பாடலாம் என்ற எண்ணம்தான் “நல்ல விடயங்களை யார் செய்தால் என்ன கொலின் அவர்களே'' அப்படியான பொது அமைப்பை உருவாக்கி அதன் செயற்பாடுகளுக்கு அன்று காலை மட்டக்களப்பிலிருந்து வராமல் முன்கூட்டியே வந்து பல ஏற்பாடுகளை செய்யுங்கள். ஏனென்றால் மகுடம் முதல் சஞ்சிகை அறிமுகவிழாவுக்காக நான் ஒரு வாரமாக ஓடித்திரிந்து கூட்டம் சேர்த்து, மண்டபம், பேச்சாளர்கள், சிறப்புப் பிரதி பெறுவோர், பார்வையாளர்களை ஒழுங்கு செய்தது மட்டுமன்றி மாலை நடைபெறவிருந்த உங்களது நிகழ்வுக்காக காலை பத்து மணிக்கு வந்துசேர்ந்த உங்களை மாலை மூன்று மணி வரை ஏற்றித்திரிந்து அன்றும் முப்பதுக்கும் மேற்பட்ட அழைப்பிதழ்களை கொடுத்து “தம்பி இதுதானா இவருடைய இல்லம்'' என்று பல எழுத்தாளர்களின் முகவரிகளை என்னிடம் கேட்டு அறிந்து கொண்ட உங்களது செயற்பாடு போல இருக்காது இத்தகைய முயற்சிகளும் என்று நம்புகிறேன். மேலும் தான் உயர்கல்விபெற்றுச் சென்றபோதும் தாகம் கலை இலக்கிய சஞ்சிகை இயங்கி வந்ததாக குறிப்பிடவேண்டும் என்பதற்காக இளங்கோ கழகத்தோடும் கவிஞர் பெரிய ஐங்கரனோடும் ஒப்பிட்டு எழுதிய கொலின் அவர்கள் மிக நீண்ட நாள் வஞ்சமொன்றைத் தீர்த்துவிட்டார். ஆனால் “இளங்கோ கழகம் செயல் இழந்து நிற்கிறது''. என்று வரையறுத்துக் கூற மைக்கல் கொலினுக்கு எவ்வித அனுமதியும் இல்லை தனது கட்டுரையின் ஆரம்பத்தில் இருந்து பிறரோடு ஒப்பிட்டு தன்னை பூபாளம் பாடும் உத்தியை கையாண்டு வருகிறார் என்பதன் விளைவே இதுவென்பது வாசகர்களுக்குப் புரியும்.

இலக்கிய வாதிகளின் கூதல்போக்கு அவசியமான ஒன்று என்பது ஒருபுறமிருக்க இதில் ஆரோக்கியமான கூதல் மற்றும் அநாகரிக கூதலுக்கும் இடையில் வித்தியாசங்கள் அதிகம் இருக்கின்றன. கொலின் குறிப்பிட்டது போல் “பிழைத்த தக்கனவும் இங்கு பிழையாய்தான் இருக்கின்றன'' என்பது அண்மைக்காலமாக திருகோணமலை இலக்கியத்தோடு நெருங்கியிருப்பவர்கள் அறிவார்கள். உண்மையில் இது தொடர்பாக தன்னுடைய தனிப்பட்ட இலக்கிய செயற்பாடுகளுக்காக மட்டும் திருமலை வந்துபோகும் கொலின் அறிந்திருக்க வாய்பில்லைதான். மேலும் என் போன்ற இளைஞர்கள் பொது அமைப்பொன்றை உருவாக்கும் முனைப்புடன் இறங்கினால் தான் துணை நிற்பதாக கூறும் கொலின் அவர்களிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டியிருக்கிறது. திருக்கோண-மலை இலக்கியத்துக்கு வருடக்-கணக்கில் பூபாளம் பாடிய உங்களால் அல்லது உங்கள் முயற்சியால் ஏன் ஆரம்பித்திலேயே இவ்வாறான பொது அமைப்பொன்றை உருவாக்க முடியவில்லை? அல்லது இங்கிருக்கின்ற மூத்த இலக்கியவாதிகளால் ஏன் அது முடியாமல் போனது? இங்குதான் இவர்களின் கூதல் உள்ளீடு செய்கிறது. ஒற்றுமையாய் சேர்ந்து பொது அமைப்பொன்றை உருவாக்கி செயற்பட முடியாத் திறனற்றவர்களாக இருக்கும் இவர்களின் கூதல்போக்கை எவ்வாறு சகஜமாக எடுத்துக் கொள்வது. கொலின் சொல்வதுபோல் மாவட்டங்கள் தோறும் இலக்கிய வாதிகளிடையே கூதல் நிலை இருந்தாலும் அம்மாவட்டங்களில் பொதுமையான இலக்கிய அமைப்பொன்று செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இங்கோ நிலமை தலைகீழாக இருக்கும் பட்சத்தில் எங்கிருந்து ஆரோக்கியமான, காத்திரமான இலக்கிச் செயற்பாடுகள் இடம்பெற முடியும்.

*தில்லைநாதன் பவித்ரன்*

# ஜான்சி ராணி

## ஒரு வீரப்பெண்ணின் கதை



கார்த்திகை 19, 1835ல் வாரணாசியில் பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்த மௌரியபந்தர் பகீரதிபாய் தம்பதியினருக்குப் பிறந்தவர் ஜான்சி ராணி. இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் மணிகர்ணிகா. இவர் ‘‘மனு'' எனவும் அழைக்கப்பட்டார். இவருக்கு நான்கு வயதாகும் போது பகீரதிபாய் இறந்து போனார். இவர் சிறு வயதிலேயே குதிரையேற்றமும், வாள் வீச்சும் கற்றுக்கொண்டார். மணிகர்ணிகாவின் தந்தையாகிய மௌரியபந்தர் பித்தூரிலுள்ள பேஷ்வா நீதிமன்றத்தில் வேலை செய்தார். பித்தூரின் பேஷ்வா மணிகர்ணிகாவைத் தனது சொந்த மகள் போல வளர்த்தார்.

ஜான்சியை ஆண்ட ராஜா கங்காதரராவ் நெவல்கர் என்பவருக்கு 1842ல் மணிகர்ணிகாவைத் திருமணம் செய்து வைத்தார் தந்தை. அதிலிருந்து மணிகர்ணிகா ராணி லட்சுமிபாய் என அழைக்கப்பட்டதுடன் ஜான்சியின் ராணியாகவும் பதவியேற்றார். 1851இல் அவர்களுக்குப் பிறந்த மகனான தாமோதர் ராவ் நான்கு மாங்களில் இறந்து போனான். தாமோதர் ராவின் இறப்பின் பின், ராஜா கங்காதராவ் நெவல்கரும் இராணி இலட்சுமி பாயும் ஆனந்த் ராவைத் தத்தெடுத்தனர். பின்னர் அக்குழந்தைக்குத் தாமோதர் ராவ் எனப் பெயர் சூட்டப்பட்டது. ஆனாலும் தனது மகனின் இழப்பின் துயரத்திலிருந்து மீளாத ராஜா கங்காதராவ் கார்த்திகை 21, 1853இல் உடல் நலமிழந்து இறந்தார்.

மன்னர் கங்காதராவ் மறைந்தபின் வளர்ப்பு மகன் தாமோதர் ராவை ஆட்சியில் அமர்த்த எண்ணினார் ஜான்சி ராணி. ஆனால் அப்போதைய ஆங்கிலேய ஆளுநர் டல்வுசி, பிரித்தானியக் கிழக்கிந்திய நிறுவனத்தின் அவகாசியிலிக் கொள்கையின் படி தத்துப்பிள்ளையை அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ள மறுத்தார். ஒரு மன்னருக்கு நேரடி வாரிசு இல்லையென்றால் அந்த அரசு தங்களுக்கே சொந்தம் என உரிமை கொண்டாடிவந்த ஆங்கிலேயர்கள் ஜான்சி நாட்டைத் தமது ஆட்சிக்குட்படுத்த முடிவெடுத்தனர். ஆங்கிலேயர்கள் 1854ம் ஆண்டு பங்குனி மாதம் ராணி லட்சுமி பாய்க்கு 60000 ரூபாயை ஓய்வூதியமாகக் கொடுத்து ஜான்சிக் கோட்டையை விட்டு வெளியேறச் சொன்னார்கள்.

ஆயினும் 1857ம் ஆண்டு வைகாசி 10ம் திகதி இந்தியக் கிளர்ச்சி மீரட்டில் ஆரம்பமாகியது. போர் வீரர்களுக்குப் புதிதாக வழங்கப்பட்ட துப்பாக்கிக் குண்டுகளில் பசுவினதும் பன்றியினதும் கொழுப்புப் பூசப்பட்டதாகப் பரவிய வதந்தியையடுத்தே இக்கிளர்ச்சி ஏற்பட்டுப் பரவத் தொடங்கியது. இச்சந்தர்ப்பத்தில் ஆங்கிலேயர்கள் இந்தியக் கிளர்ச்சி சம்பந்தமாகவே கவனம் செலுத்தினர். ஜான்சி பற்றி அதிகக் கவனம் செலுத்தவில்லை. இதன் காரணமாக இராணி லட்சுமிபாய் தனியாகவே ஜான்சியை ஆட்சி செய்தார். வடமத்திய இந்தியாவிலே ஜான்சி அமைதியான பிரதேசமாக இருந்தமையைக் காட்டுவதற்காகவும் ஜான்சி எந்தவிதமான முற்றுகையை எதிர்கொள்வதற்கான அபாயத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதனைத் தெளிவுபடுத்துவதற்காகவும் இராணி இலட்சுமிபாய் [illegible] பண்டிகை [illegible] கொண்டாடப்பட்டது.

ஆயினும் இராணி இட்சுமிபாய் ஆங்கிலேயர்களை எதிர்க்கக்கூடும் என்ற அச்சம் ஆங்கிலேயரிடம் இருக்கவே செய்தது. இதனால் ஆங்கிலேயர்கள் 1857ம் ஆண்டு ஆனி மாதம் 8ம் திகதி ஜோக்கன் பாக்கில் பிரித்தானியக் கிழக்கிந்திய நிறுவனத்தின் அதிகாரிகளைப் படுகொலை செய்ததில் இராணி இலட்சுமிபாய்க்கும் பங்கு உள்ளதாகக் கூறினர். பொதுமக்களும் விவசாயிகளும் இராணி இலட்சுமிபாய் மீது வைத்திருந்த மதிப்பை சீர்குலைக்கவே இவ்வாறு கூறினர். இதனையே காரணமாக வைத்து 1858ம் ஆண்டு பங்குனி மாதம் 23ம் திகதி ஹுரோஸ் தலைமையில் ஆங்கிலேயர்களின் படை ஒன்று ஜான்சி-யைக் கைப்பற்று-வதற்காக அனுப்பி-வைக்கப்பட்டது.



ஜான்சியின் படைகளுக்கு உதவி செய்வதற்காக தாந்தியா தோபேயின் தலைமையில் 20000 பேரைக் கொண்ட படை அனுப்பி வைக்கப்பட்டது. ஆனாலும் அப்படை பங்குனி மாதம் 31ம் திகதி ஆங்கிலேயர்களின் படையுடன் இணைந்த காரணத்தினால் தாந்தியா தோபேயினால் ஜான்சி ராணிக்கு உதவ முடியாமல் போனது.

ஆனாலும் ஜான்சி ராணி பிரித்தானியருக்கு அடிபணிய மறுத்துத் தமது படைகளுடன் இணைந்து கடுமையாகப் போர் புரிந்தார் தனது நாட்டை விட்டுக் கொடுக்க மறுத்த ஜான்சி ராணி இலட்சுமிபாய் தனது படை வீரர்களை முன்னின்று வழிநடத்திச் சென்று பெரும் ஆற்றலுடனும் மிகுந்த துணிச்சலுடனும் போர் புரிந்தார். எனினும் 3 நாட்களின் பின்னர், ஆங்கிலேயர்களால் அத்துமீறி நுழைந்து நகரத்தைக் கைப்பற்ற முடிந்தது. கடும் கோபத்திலிருந்த பிரித்தானியர் அரண்மனையைச் சூறையாடிப் பொருட்களை கொள்ளையடித்தனர்.

1858ம் ஆண்டு ஆனி மாதம் 17ம் திகதி கோட்டாகி சேராய் என்ற இடத்தில் வெள்ளையரை எதிர்த்து ஜான்சி ராணி போரிட்டார். துரதிஷ்டவசமாக இப்போரின்போது படுகாயமடைந்து அத்தினத்திலேயே வீரமரணம் அடைந்தார்.

ஆக்கம்: **ரக்ஷிகா ஸ்ரீதர்**
தரம் - 09
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சென்ற வாரம்...**

**நாதஸ்வரத்தை உயிரிலும் மேலாக மதித்தவர் அவர். இப்போதோவென்றால் அதை ஏறிட்டுப் பார்ப்பதே சிரமமாக இருந்தது.**

# தம்பன் கோட்டை

பாகம் - 5

## வரலாற்று நாவல்

தம்பலகாமம் த. வேலாயுதம்

தொடக்கத்தில் தன் தனிமையில் ஆறுதல் தேடிக்கொள்ள குடமுருட்டியாற்று மணல் பரப்புக்குப் போய்வருவார். பிறகு ஓரிரு சந்தர்ப்பங்களில் ரங்கநாயகியையும் அழைத்துச் சென்றிருக்கின்றார். இந்த பயணங்களின் போது மகளுக்கு இராகங்கள் பற்றி எதையாவது சொல்லிக்கொடுத்துக் கொண்டே-யிருந்தார். அவளது கிரகிக்கும் சக்தி அவரையே அசத்தியது. படிப்படியாக அவளுக்கு இராகங்களைப் பாடிக்காட்டலானார். மனமும் தேறுதல் கண்டது. அவரது பயிற்சிகளால் ரங்கநாயகியும் இசைத்துறைக்குள் படிப்படியாக நுழைந்து கொண்டிருந்தாள்.

பிரபலமான நாதஸ்வர வித்துவானாகப் புகழ் பெற்ற மனிதர் அவர். நாதஸ்வரத்தை அவர் கையிலெடுக்காவிட்டாலென்ன அவரைத் தேடிக்கொண்டு சந்திக்க எப்போதும் ஆட்கள் வந்து கொண்டே இருப்பார்கள். தந்தையிடம் கற்றதை உருப்போட்டுப் பார்க்கத் தனிமையான சூழல் இல்லா நிலையில் அவளாகத் தேடிக் கொண்ட மேடைதான் குடமுருட்டியாறு வெண்மணல் பரப்பு. அப்படி போயிருந்த வேளையில்தான் ரங்கநாயகி அந்த புரவி வாலிபனைக் கண்டாள்.

தகப்பன் ஆகா... ஆகா... அபூர்வம் என்று பாராட்டியபோது அவளுக்கு ஏனோ குதிரை மீது கம்பீரமாக சென்ற வாலிபனது எண்ணம் தோன்றியது. அந்த வாலிபன் இந்த இராகத்தைப் பாடச் சொல்லிக் கெஞ்சியது நினைவில் தோன்றி உடல் முழுவதும் ஒரு இன்பக் கிளர்ச்சியை ஓடவிட்டது. முன் பின் தெரியாத ஒருவன் கேட்டால் நான் எப்படிப் பாடுவதாம்? தனக்குள் பதிலொன்றை உருப்போட்டுப் பார்த்துக் கொண்டாள் ரங்கநாயகி.

ரங்கநாயகிக்கு ஏனோ குடமுருட்டியாற்று வெண்மணல் பரப்புக்குப் போகவேண்டும் என்று ஆசையாக இருந்தது. நிச்சயமாக பாடிப்பழக மட்டும்தான் என்பதல்ல ஒரே காரணம் என்று அவளுக்குத் தெரிந்தது. அதனால் அவள் போனாள். அந்த குதிரை வாலிபனைச் சந்தித்த இடத்தினின்று சுற்றும் முற்றும் பார்த்தாள். யாரும் தென்படவில்லை. ஆற்றோரமாகச் செல்லும் சாலையை நோக்கி அவளது பார்வையைக் கண்கள் இழுத்துச் சென்றன. ஏமாற்றமாக இருந்தது.

பாடுவதற்கு மனம் வராத நிலையில் மெல்ல மெல்ல ஆற்றில் இறங்கினாள். பாவாடையைச் சற்று உயர்த்தி நனையாமல் பார்த்துக் கொண்டாள். திடீரென்று நீர்மட்டம் கூடுவதுபோல் தோன்றியது. உடனே ஊரில் கூறப்படும் காரணம் நினைவுக்கு வரவே கரைக்கு ஓடி வந்துவிட்டாள். திரும்பவும் ஆற்றைப்பார்த்தாள் நீர் மட்டம் கூடியதாகத் தெரியவில்லை. வீண் பிரமை என்றவாறு, ஊர்க் கதையை நினைத்துப்பார்த்தாள். அந்த ஆற்றுக்கு குடமுருட்டியாறு என்று பெயர் வந்த கதையது.

காலை வேளையில் ஊர்ப்பெண்கள் தண்ணீர் அள்ளக் குடங்களுடன் ஆற்றுக்கு வந்து கரையில் குடங்களை வைத்து விட்டுப் பல்துலக்கிக் கொண்டும், பராக்குப் பார்த்துக் கொண்டும், ஊர்க்கதைகளை அலசிக் கொண்டும் நிற்கின்றபோது, விநாடிக்கு விநாடி நீர்மட்டம் கூடிக் குறைந்து ஓடும் அந்த ஆறு, அருகிலிருக்கும் குடங்களையும் உருட்டிக் கொண்டோடுமாம். இதனால்தான் குடமுருட்டியாறு என்று பெயர் வந்தது என்று ஊரில் பெரியவர்கள் சொல்வார்கள்.

அந்தக்காலகட்டத்தில் பெரிய வாழைத்தோட்டம் இங்கே இருந்திருக்கின்றது. இப்போது வாழைகள் அங்கு இல்லை ஆனாலும் அது வாழைத்தோட்டம் என்றே அழைக்கப்படுகின்றது. இந்த இடத்தில் குடமுருட்டியாறு வடதிசை திரும்பி பால் துறைக்கடலை நோக்கிப் பாய்கிறது. இந்த ஆற்றுப் பிரதேசம் பதிவான தரைப்பிரதேசமாக இருப்பதால் மாரிவெள்ளம் மணலை வார்த்துச் சென்றுள்ளது.

(தற்போது குடமுருட்டியாறு, மழைக்காலங்களில் நீர்பாயும் ஓடையாகத் தூர்ந்துபோய் இருக்கிறது.)

ரங்கநாயகி இந்த நினைவினின்றும் விடுபட்டுத் தான் நின்று கொண்டிருக்கும் மணல்பரப்பில் அங்கொன்றும் இங்கொன்றுமாக பயிராகி வளர்ந்து நின்ற மருத மரங்களை கவனித்தாள். நான்கு திசைகளிலும் கிளைபரப்பி விதானம்போல் ஆகாயத்தை மறைத்திருந்ததால் இயற்கை அன்னை சிருஷ்டித்த தூண்களிலான மண்டபம் போலத்தெரிந்தது. ஊர் மக்கள் பொழுதுபோக்க எவ்வளவு அழகான இடம்.... அமைதியான இடம் இது என்று நினைத்துக் கொண்டாள்.

உண்மைதான்! இந்த இடத்தை ஒரு உல்லாசமான பொழுது போக்கு இடமாக ஊரவர்கள் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால் ஏனோ அதில் கவனம் செலுத்துவதில்லை. மாறாக தம்பலகாமம் நெற்செய்கையாளர்கள்தான் அந்த இடத்தை உணவு உட்கொள்ளும் இடமாகத் தண்ணீர், நிழல் ஆகியவற்றை முன்வைத்து பயன்படுத்துவதுண்டு. அறுவடையான பிறகு அந்தப்பயன்பாடும் இல்லை. அதனால்தான் இந்த இடம் ஏகாந்தமாக மனித சஞ்சாரமில்லாது இருக்கிறது. ஏதோ இதுகூட நமக்கு அனுகூலம்தான்.

ரங்கநாயகி சிந்தனைகளில் இருந்து விடுபட்டாள். அவளுக்கு இந்த இடம் ஒரு சொர்க்கம் போல மனதில் பட்டது. தந்தையோடு வந்த முதல் நாளே அவளுக்கு இந்த இடம் பிடித்துப்போய் விட்டது. அந்த மணல் சோலையைக் கண்டதும் என்ன அழகான இடம் என்று அவள் பரவசப்பட்டவள் அல்லவா? அவளுக்கு பாடல்களைத் தனிமையில் பாடிப்பழக இதைவிடச் சிறந்த இடம் இருக்குமா?

திடீரென்று கேட்ட குதிரைக் குளம்பொலி அவளைத் திடுக்கிடப் பண்ணியது. சாலையை நோக்கிய கண்கள் மகிழ்ச்சியால் விரிந்தன. ஒரு கணம்தான்! தனது அவசரம் குறித்துத் தன்னைக் கடிந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தவளாகத் திரும்பி ஆற்றை நோக்கினாள்.

தொடரும்...




## திருகோணமலையில் சோழர்களால் ஏற்பட்ட மாற்றங்கள்...

இன்று கூட சில ஆய்வாளர்கள் பண்டைக் காலங்களில் இலங்கையை கைப்பற்றி ஆட்சி புரிந்த தென்னிந்திய தமிழ் மன்னர்கள் சிங்களத்தை வென்று தமிழர்களுக்கு பெருமை சேர்த்தார்கள் என்ற பகட்டுக் கதையும் ஒன்றாக இருந்து வருகிறது.. மேலும் இந்தக் கூற்றை நிரூபிப்பதற்காக அன்றைய இலங்கை இந்திய மன்னர்களின் வரலாறுகளில் காணப்படுகின்ற பல உண்மை சம்பவங்களை மறைத்தும். பலவற்றை திரிவு படுத்தியும் அதையே உண்மைச் சரித்திர வரலாறு என்று அவர்களை நம்பச் செய்து அதன் மூலம் தங்கள் இனவெறிப் பிரச்சாரத்தில் வெற்றியடைந்தும் வந்திருக்கிறார்கள்.

இவர்களுடைய இந்த கபடத்தனத்தை அறிந்து கொள்ள முடியாத நமது தமிழினமும்.. இந்த தந்திரசாலி அரசியல்வாதிகள் கூறி வந்ததையே உண்மைச் சரித்திரமாக இதுவரை காலமும் நம்ப வேண்டிய கட்டாயமும் இருந்து வந்திருக்கிறது.. ஆனால் அந்தக்கால சரித்திரகால ஆவணங்களிலும்.. கல் வெட்டுகளிலும்.. செப்பேடுகளிலும்.. ஓலைச் சுவடுகளிலும் நிறைந்து கிடக்கும் அந்த உண்மை வரலாறுகளை இவர்கள் ஆராய்ந்து பார்த்திருந்தால் .தங்கள் நம்பிக்கை எத்தனை முட்டாள்தனமானது என்பதை உணர்ந்திருப்பார்கள்.

இவர்களைப் போலவே சிங்கள இனவாத அரசியல்வாதிகளும் தங்கள் சுயநல அரசியலை சிங்கள மக்கள் மத்தியில் நிலைப்படுத்தும் நோக்கத்துடன், சிங்களவர்களை தமிழர்களிடமிருந்து பிரித்தெடுத்து அவர்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்து அரசியல் நடத்துவதற்காக.. இந்த நாடு சிங்களவர்களுக்கு மட்டுமே உரித்தான தேசம் ஆகவே இங்கு தமிழர்கள் தங்கள் உரிமைகளை கோருவதற்கு லாயக்கற்றவர்கள் என்ற கோட்பாடை கொண்டு வந்து அதன் மூலம் சிங்கள மக்களின் மனதில் இனபேத உணர்வை உருவாக்கி.. இனவெறியைத் தூண்டி.. இனக் கலவரங்களுக்கு வித்திட்டார்கள்.. இப்படியான தங்கள் இனபேத கோட்பாட்டை நிரூபிப்பதற்காக இலங்கையின் புராதன சரித்திர வரலாற்று ஆவணங்களான தீபவம்சம், மகாவம்சம், சூரவம்சம் போன்றவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பலவற்றை சிங்கள மக்களுக்கு சார்பாகவும் தமிழ் மக்களுக்கு எதிராகவும் திரித்து.. தமிழ் இனம் சிங்கள இனத்திற்கு தொன்று தொட்டே எதிரான ஒரு இனமாக சிங்கள மக்கள் மனதில் உருப்பெறச் செய்து..தமிழர்கள் தங்களுக்கு கீழானவர்கள் என்ற எண்ணத்தை வேரூன்றச் செய்திருக்கிறார்கள்.. இதற்கு சில பௌத்த பிக்குகளும் உடந்தையாக இருந்து வந்தது வேதனைக்குரியது.. தமிழர்களைப் [illegible] மக்களும் அந்த [illegible] ஆவணங்களை சரிவர ஆராய்ந்து பார்த்திருந்தால்.. அவர்களும் தங்கள் நம்பிக்கை எத்தனை முட்டாள்தனமானது என்பதை உணர்ந்திருப்பார்கள்.

ஆம்.. இலங்கையின் கடந்தகால வரலாறுகளை எடுத்துக் கொண்டால்.. தென்னிந்திய மன்னர்களின் ஆக்கிரமிப்புகள் முறியடிக்கப்பட்டு இங்கே மீண்டும் சிங்கள தமிழ் மன்னர்களின் ஆட்சி மலர்ந்ததை தொடர்ந்து போத்துக்கேயர்.. பின்னர் ஒல்லாந்தர்.. முடிவில் ஆங்கிலேயர் என்று இந்த வெள்ளைத்தோல் கொள்ளையர்களின் அக்கிரமமான ஆக்கிரமிப்புக்கு முற்பட்ட காலத்தில் இங்கே நடந்து முடிந்து போன இந்த தமிழ் சிங்கள மன்னர்களின் சிறப்பான ஆட்சியில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஒரு சிங்கள மன்னன் வடக்கை ஆண்ட தமிழ் மன்னர்களுக்கு எதிராக போர் தொடுத்தான் என்றோ.. அல்லது ஒரு தமிழ் மன்னன் ஒரு சிங்கள மன்னனுக்கு எதிராக போர் தொடுத்திருத்தான் என்றோ இலங்கையின் மிகப் பழமை வாய்ந்த பூர்வீக வரலாற்று ஆவணங்களான இந்த தீபவம்சத்திலோ அல்லது மகாவம்சத்திலோ அல்லது சூரவம்சத்திலோ பதியப்பட்டிருக்க-வில்லை..

அதே போல இந்த சிங்கள தமிழ் மன்னர்கள் இலங்கையில் வாழ்ந்த தமிழர்களையோ அல்லது சிங்களவர்-களையோ தங்கள் எதிரிகளாக பாவித்து அவர்களை கொன்றொழித்திருக்-கிறார்கள் என்றும் பதியப் பட்டிருக்கவில்லை.. ஆனால் நாடு பிடிக்கும் ஆசையுடன் நமது தேசத்தில் அத்துமீறி நுழைந்த தென்னிந்திய மன்னர்களை அவர்கள் ஒன்றுபட்டு விரட்டியடித்திருக்கிறார்கள் என்றுதான் பதியப்பட்டுள்ளன. அதேபோல பிற்காலச் சரித்திரங்களில் [illegible] நமது தேசத்திலிருந்து வெளியேற்றுவதற்காக இதேபோலத்-தான் அவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு விடுதலைப் போராட்டம் நடத்தி வெற்றி அடைந்திருக்கிறார்கள் என்று பதியப்பட்டிருக்கிறது.

திருகோணமலை நகரத்தில் இருந்து வவுனியா நோக்கிச் செல்லும் வீதியில் அமைந்திருக்கும் கன்னியா வெந்நீர் ஊற்றுக் கிணறுகளை சற்று தாண்டும்போது தென்படும் வரலாற்றுப் புகழ் மிக்க "வெல்கம் விகாரை" பிரதேசத்தில் அன்று அங்கே வாழ்ந்த தமிழர்களுடன் ஒன்றுபட்டு வாழ்ந்து அவர்களுக்கு சேவையாற்றிய அந்த பௌத்த பிக்குகள் கட்டிய விகாரைகளில் ஒன்றான வெல்கம் விகாரை அமைந்திருந்தது. இதனால்தான் அந்த விகாரை அமைந்திருந்த அந்த பிரதேசத்திற்கு பின்னாளில் வெல்கம் விகாரை என்ற பெயர் சூட்டப்பட்டிருக்க வேண்டும் என்று கருத இடமுள்ளது.

இந்த விகாரை ஒரு பெரும் பாடசாலையாகத்தான் இயங்கியிருக்க வேண்டும் என்பதற்கு ஆதாரமாக, ராஜராஜ சோழன் திருகோணமலையை கைப்பற்றிய சமயத்தில் இந்த விகாரைப்பள்ளிக்கு "இராஜராஜப் பெரும்பள்ளி" என்ற பெயரைத்தான் சூட்டியிருந்தான். மேலும் அவன் இலங்கையை கைப்பற்றி சிங்களப் பிரதேசங்களில் அமைந்திருந்த பல பௌத்த விகாரைகளை நிர்மூலமாக்கியபோது இந்த விகாரையை மட்டும் விட்டு வைத்தான் காரணம்.. பொருளாதாரம் மட்டுமே ......

(இன்னும் நடுவோம்)

கா. செந்தூரன்

**சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்**

**குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி எண்**

**1929**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வலம்

## தமிழர் ஐக்கிய ராச்சியத்திலிருந்து நாடுகடத்தப்படுவதை தடுத்தது இலண்டன் உயர் நீதிமன்றம்

பெப்ரவரி மாத கடைசித் தினத்தில் இலண்டனில் இருந்து இலங்கைக்கு நாடுகடத்தப்படவிருந்த தஞ்சம் மறுக்கப்பட்ட புகலிடக் கோரிக்கைக் காரர்களை தற்போது நாடுகடத்த வேண்டாம் என லண்டன் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இலங்கைக்கு மீளத்திருப்பி-யனுப்பப்பட்டால் தாம் சித்திரவதை-களுக்கு உல்லாக நேரிடும் எனும் தஞ்சக் கோரிக்கை மறுக்கப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்களின் மனுவின் மீது மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு உண்மை நிலையை தெரிந்துகொள்ளும் வரை அவர்களை மீள அனுப்புவதை நிறுத்துமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இம்முடிவினால் ஐக்கிய இராச்சியத்தின் எல்லை முகவர் நிலையம் ஏமாற்ற-மடைந்துள்ளதாக தெரிவித்துள்ளது.

## யூரோவை விட்டு சில நாடுகள் விலகும் – பெர்லுஸ் கோணி



யூரோ நாணயம் பலவீனப்படுவதால் அந் நாணயப் பாவனையிலிருந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் சில அவ் அமைப்பிலிருந்து விலகும் வாய்ப்புள்ளதாக இத்தாலிய முன்னால் பிரதமர் பெர்லுஸ் கோணி தெரிவித்துள்ளார். ஐரோப்பிய மத்திய வங்கி கடனளித்து உதவினால் மட்டுமே அந் நாடுகள் யூரோப் பாவனையைத் தொடரும் என்றும் கூறினார்.

## உலகில் பரவத்தொடங்கியுள்ள புதிய உயிர்க்கொல்லி வைரஸ் "எங்கோவ்"



முன்னெப்போதுமே மனித குலத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தாத புதிய வைரஸ் ஒன்று பரவி வருவதாக அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட மருத்துவ ஆய்வு மையமொன்று தகவல் ளியிட்டுள்ளது. இவ் ஆய்வு மையப் பேராசிரியர் மைக்கல் ஒஸ்டர்கோம் கருத்துக் கூறுகையில் "தற்போதுவரை இவ் வைரஸ் தொடர்பாக தெரிந்து வைத்துள்ள செய்திகள் தொடர்பான கரிசனையை விட தெரியாத விடயங்கள் பயத்தை ஏற்படுத்துகின்றன'' என தெரிவித்துள்ளார். "எங்கோவ்" (NCoV - Novel Corona Virus) எனப் பெயரிடப்பட்டுள்ள இவ் வைரஸ் தொற்றிய பதின்மூன்று பேரில் எழுவர் மரணமாயுள்ளனர். முதல் முதலில் லண்டனில் தொற்று ஏற்பட்ட கட்டார் நாட்டுப் பிரசையைத்தொடர்ந்து 6 சவூதியர்களும், இரு ஜோர்தானிகளும், ஏனையவர்கள் ஐக்கிய இராச்சயத்தையும், யேர்மனியையும் சேர்ந்தவர்களாவர்.

## செவ்வாய் கிரகத்திற்கு பயணமாகவுள்ள சோடிகள்

செவ்வாய்க்கு சுற்றுலாப் பயணம் செய்த முதல் சுற்றுலாப் பயணியான டெனிஸ் டிட்டோ அமெரிக்க டைகடன் நிறுவனத்துடன் இணைந்து தம்பதிகளை செவ்வாய் கிரகத்திற்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இப்பயணம் 501 நாட்கள் விண்வெளிச் சஞ்சரிப்புக்கு வித்திடும் எனத் தெரிய வருகின்றது. 2018ம் ஆண்டில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்த டிட்டோ அவ் ஆண்டிலேயே புவிக்கு மிக அருகில் செவ்வாய்க் கிரகம் வருகின்றது எனத் தெரிவித்தார். இவ்வாய்ப்பைத் தவற விட்டால் பின்னர் 2031 இலேயே வாய்ப்புக் கிடைக்கும் என தெரிய வருகின்றது.

## வன்புணர்வுக் குற்றத்திற்குத் தண்டனை

### ஆட்டுக் கிடாவும்... ஐந்து வெடக்கோழிகளும்

இந்தியா ஜார்கண்ட் மாநில தலைநகர் ரஞ்சியிலிருந்து தொலைவிலுள்ள கிராமமொன்றில் இளம்பெண் ஒருவரை பாலியல் வன்புணர்வில் ஈடுபடுத்திய இளைஞனுக்கு அக்கிராம பஞ்சாயத்து ஆட்டுக்கிடாவொன்றை அபராதமாக விதித்துள்ளது.

இதேபோல் அம்மாநிலத்தின் சக்ரதார்பூர் பகுதியில் மேற்கொள்ளப்-பட்ட மற்றொரு பாலியல் வன்புணர்வுக் குற்றத்துக்கு குற்றவாளிக்கு ஐந்து வெடக்கோழிகளை அக்கிராம சபை அபராதமாக அறிவித்துள்ளது.

இந் நிலையில் பாலியல் குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை வழங்குவதா அல்லது மரண தண்டனை வழங்குவதா அல்லது ஆண்மை நீக்கம் செய்வதா என்ற கருத்தாடல்களும் இந்தியாவில் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது

## "விஸ்வரூபம்" வசூலிலும் விஸ்வரூபம்



உலகநாயகன் கமலஹாசனின் இயக்கத்தில் உருவான விஸ்வரூப்ம் திரைப்படம் வசூலில் இருநூறு கோடிய்ய தொட்டு சாதனை வெற்றியை அடைந்திருக்கிறது. இஸ்லாமியர்கள் விமர்சிக்கப்பட்டதாக பல நாட்களாக விமர்சிக்கப்பட்ட இத்திரைப்படம் நடிகர் கமலினால் இந்திய மதிப்பில் தொன்னூற்றைந்து கோடி ரூபா செலவில் எடுக்கப்பட்டதாகும்.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் – 06

பிரதீபா

1. பொழுதினை ஒழுங்கு முறைப்படி காட்டும் விடை எது?
   1. பகல், மாலை, காலை, இரவு 2. இரவு, பகல், மாலை, காலை
   3. காலை, பகல், மாலை, இரவு
2. பெறுமதியின் ஒழுங்கு முறைப்படி பொருட்களைக்கொண்ட கூட்டம் எது?
   1. தங்கம், வெள்ளி, இரும்பு, செம்பு 2. தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு
   3. வெள்ளி, செம்பு, தங்கம், இரும்பு
3. பருமனில் ஒழுங்குமுறைப்படி பிரதேசங்களைக் காட்டும் விடை எது?
   1. நாடு, மாகாணம், உலகம், கிராமம் 2. கிராமம், உலகம், மாகாணம், நாடு
   3. கிராமம், மாகாணம், நாடு, உலகம்
4. பிழையான கருத்துள்ள விடையை தெரிவு செய்க?
   1. அரிசி ஒரு வகைத் தானியம். நெல்லைக் குற்றி பெறப்படுகிறது.
   2. புடோலங்காய் ஓர் காய்கறி. இது இறக்குமதி செய்யப்படுகின்றது.
   3. வாழை ஒரு செடியாகும். எமது நாட்டில் வளர்கிறது.
5. அருண் பாடசாலைக்கு அருகில் வசித்து வந்தான். எனினும் அவன் பல நாட்களாகப் பாடசாலைக்குச் சமூகமளிக்கவில்லை. இதற்குக் காரணமாக அமையக் கூடியது?
   1. பாடசாலை பஸ் வராதிருந்தமை.
   2. அது பாடசாலை விடுமுறை காலமாக இருந்தமை
   3. அவன் சுகவீனமுற்று இருந்தமை
6. ....... நடைபெறவுள்ள டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சியில் அனுலா கலந்து கொள்வாள்.
   1. இன்டைக்கு 2. இன்றைக்கு 3. இண்டைக்கு
7. மாணவர்கள் தமிழ் புத்தகத்தை ............
   1. வாசிப்போம் 2. வாசித்தார் 3. வாசித்தார்கள்
8. எதையும் உரிய முறையில் செய்யா விட்டால், அதனால் ஏற்படவுள்ள பயன் குறையும்.
   1. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் 2. ஆறின கஞ்சி பழங்கஞ்சி
   3. ஆறிலும் சாவு நூறிலும் சாவு
9. அமாவாசை தினத்தில் பால் போன்ற நிலவொளியில் நிலாச்சோறு உண்டதாக ரிசானா கூறினாள். இது நிகழ வாய்ப்பில்லாததற்கு காரணம்?
   1. இரவில் நிலாச்சோறு உண்பதில்லை
   2. இரவில் பால் போன்று நிலா ஒளி தோன்றாது
   3. அமாவாசையில் சந்திரன் தோன்றாது.

**கீழ்வரும் பாடலை வாசித்து 10, 11 ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப்பார்த்தாலும் - சாதி
தெரிவதுண்டோ அப்பா

10. "ஒழுகும் கண்ணீரில்" என்பதன் கருத்து என்ன?
   1. அழுகின்ற கண்ணீரில் 2. ஓடுகின்ற கண்ணீரில்
   3. கண்ணில் தேங்கியுள்ள கண்ணீரில்
11. இப்பாடலின் பிரதான கருத்து எது?
   1. குருதியின் மூலம் சாதியை அறியலாம்.
   2. சாதி வேறுபாடுகள் உள்ளன 3. சாதி ஒன்றே உண்டு
12. ஓர் திருமண வைபவத்திற்கு வருகை தந்த ஆண்களின் எண்ணிக்கை 749 ஆகும். அங்கு வந்த பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையிலும் பார்க்க 151 அதிகமாகும். வந்த பிள்ளைகளின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையிலும் பார்க்க 54 குறைவாகும். எனின், அத்திருமணத்திற்கு வந்த மூவரினதும் கூட்டுத்தொகை யாது?
   1. 2344 2. 2398 3. 2290
13. ராதா கடையில் 2மீ துணியும், 175செ.மீ துணியும் வாங்கினாள். எனில் அவள் வாங்கிய மொத்தத் துணியின் அளவு யாது?
   1. 2மீ 175செ.மீ 2. 375மீ 3. 375செ.மீ
14. தந்தையிடம் உள்ள காணியில் 2/10 பங்கை மகனுக்கும், 3/5 பங்கை மகளுக்கும் கொடுத்தால், தந்தையிடம் எஞ்சியுள்ள காணி என்ன பங்கு?
   1. 2/10 2. 2/5 3. 10/15
15. இரு தூண்களை இணைத்துக் கட்ட 3மீ கயிறு தேவை. 15 தூண்களை இணைத்துக்கட்ட தேவையான கயிற்றின் நீளம் எவ்வளவு?
   1. 45மீ 2. 42மீ 3. 39மீ
16. ஒரு மோட்டார் சைக்கிள் 10 கிலோமீற்றர் தூரத்தைக் கடப்பதற்கு 20 நிமிடம் எடுத்தது. எனில், இதே கதியில் மோட்டார் சைக்கிள் சென்றால் 15 கிலோமீற்றர் தூரத்தைக் கடப்பதற்கு எவ்வளவு நேரம் தேவைப்படும்?
   1. 10நிமிடம் 2. 20நிமிடம் 3. 30 நிமிடம்
17. அனுலாவுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும், புதன் கிழமையும் விடுமுறை கிடைக்கும். ராதாவுக்கு ஒன்றுவிட்ட ஒரு நாள் விடுமுறை கிடைக்கும். இன்று ஞாயிற்றுக் கிழமை இருவருக்கும் விடுமுறை கிடைத்துள்ளது. இக்கூற்றுக்கு அமைய பின்வரும் கூற்றுக்களிடையே சரியான விடை எது?
   1. அடுத்த ஞாயிற்றுக் கிழமை இருவருக்கும் லீவு கிடைக்கும்.
   2. இன்னும் எட்டு நாட்களில் அவர்கள் இருவருக்கும் லீவு கிடைக்கும்.
   3. அடுத்த வியாழக்கிழமை ராதாவுக்கு மட்டும் விடுமுறை கிடைக்கும்.

பெயர்: ..............................................................
..............................................................
முகவரி: ..............................................................
..............................................................
..............................................................
பாடசாலை: ..............................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புதிய போப்பாண்டவர் நியமனம் -

# ஆசியக் கனவு நனவாகுமா?

பீற்றர்சன்

ஜேர்மனியைப் பிறப்பிடமாகக் கொண்ட 16ம் போப்பாண்டவர் தனது போப்பாண்டவர் பதவியை தாமாகவே துறந்ததானது கடந்த 600 ஆண்டுகளில் நிகழாத ஓர் விடயமாக உலக சரித்தில் எழுதப்பட்டுள்ளது.

இப் பதவித் துறப்பைத் தொடர்ந்து புதிய போப்பாண்டவருக்கான தேடுதலை ரோமன் கத்தோலிக்க மதத்தினர் ஆரம்பித்துள்ளனர். புதிய போப்பாண்டவரைத் தேர்வு செய்யும் பொறுப்பு 116 கர்தினால்களின் கைகளிலேயே (College of Cardinals) தங்கியுள்ளது.

எனினும் பிரித்தானியாவின் கர்தினால் வண. கெய்த் ‘ஓ’ பிரெய்ன் தனது பதவி விலகலை போப் தேர்வுக்கு முன், 25.02.2013ல் அறிவித்துள்ளதால் தற்போது 115 கர்தினால்கள் மட்டுமே போப் தேர்வில் ஈடுபடும் நிலை எழுந்துள்ளது. மூடப்பட்ட அறைக்குள் ஒன்றுகூடும் கர்தினால்கள் தமது தலைவரைத் தேர்வு செய்வர். அவ்வாறு தேர்வு செய்யப்படுபவர் யாரென முதலே தெரியவராது. அத்துடன் தன்னைத் தேர்வு செய்யும்படி யாரும் முன்னரே பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடவும் முடியாது.

எனினும் மூப்பின் அடிப்படையிலும், செயற்றிறன், நிர்வாகத்திறன் போன்ற இன்னோரன்ன திறன்களின் அடிப்படையிலும் தேர்வாகும் தகுதியுள்ள' கர்தினால் யார் என்பதை ஓரளவிற்கேனும் எதிர்வுகூற முடியும். அவ்வாறான எதிர்வுகூறல் ஒன்றை பிரபல போர்ப்ஸ் சஞ்சிகை அண்மையில் வெளியிட்டது. ஆசியக் கண்டத்தைச் சேர்ந்த அந்த ஒரேயொரு கர்தினால் இலங்கையின் பேராயர் ஆண்டகை அல்பேட் மல்கம் கார்டினல் ரஞ்சித் அவர்கள் ஆவார்.

போப் பதவி என்பது வெறுமனே உலகின் மிக அதிகளவான மக்கள் பின்பற்றும் சமயத்தின் ஆன்மீகத் தலைவர் பதவி மட்டுமா? என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். உலகில் அதிகளவான மக்கள் பின்பற்றும் மதங்கள் இரண்டு. அவை இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம் ஆகும். பெருமளவு அபிவிருத்தியடைந்த நாடுகளும் உலகின் வல்லரசுகளும் பின்பற்றும் மதம் கிறிஸ்தவம். எனவே கிறிஸ்தவர்களின் தலைமைப் பதவியென்பது ஆன்மீகக் காரணியை மட்டும் கொண்டு அமையப் போவதில்லை. அப்பதவியை யார் தாங்க வேண்டும் என்பதை சமூக மற்றும் அரசியற் காரணிகளும் சேர்ந்தே தீர்மானிக்கின்றன.

இதனடிப்படையில் தற்போதுவரை போப்பாண்டவர்களாக தமது நாட்டைச் சேர்ந்தவர்களையே நியமித்து அழகு

> **“16வது (XVI) போப்பாண்டவர் பதவி விலகியதை அடுத்து நியமனம் செய்யப்படவுள்ள புதிய போப்பாண்டவர் 17வது (XVII) போப்பாண்டவர் என அழைக்கப்பட்டால் உலகில் ஒரே நேரத்தில் இரண்டு போப்பாண்டவர்கள் இருக்கப் போகின்றார்கள்”**

பார்த்துள்ள ஐரோப்பிய நாடுகள் இனிவரும் காலத்தில் அப்பதவியை இலத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க அல்லது ஆசிய நாடுகளுக்கு விட்டுக்கொடுக்க முன்வருமா? என்பது கேள்விக்குறியே! ஏனெனில் வத்திக்கானின் ஊடாக உலகெங்கும் நேரில்க் கட்டுப்பாட்டைப் பேணக்கூடிய அரசியற் பதவியாகவும் போப் பதவி இருக்கின்றமையை இங்கு கருத்திற்கொள்ள வேண்டும்.

அடுத்து கண்டங்களின் அடிப்படையில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையை எடுத்துப் பார்த்தால் ஐரோப்பாவையும் அடுத்து ஆபிரிக்கக் கண்டமே அதிகூடிய கிறிஸ்தவர்களைக் கொண்டிருக்கின்றது. எனவே அடுத்த போப்பை ஐரோப்பா விட்டுக்-கொடுக்குமானால் அப்பதவி ஆபிரிக்க கண்டத்தைச் சென்றடைய வேண்டியதாகவே இருக்கும். அதற்கேற்றாற்போல் 63 வயதான ஆபிரிக்க கண்டத்தின் காணா நாட்டைச் சேர்ந்த கர்தினால் பீற்றர் கொட்வோ அப்பையா டேர்க்சண் போப்பாண்டவராகும் முழுத்தகுதியுடன் நீதிக்கும் சமாதானத்திற்குமான மேல்நிலைச் சபையின் தலைவராக வத்திக்கானில் செயலாற்றி வருகின்றார்.

இவரையும் தாண்டி ஆசியக் கண்டத்தின் இலங்கை நாட்டின் கர்தினால் பேராயர் மல்கம் ரஞ்சித் அவர்களுக்கான தேர்வில் ஆதிக்கம் செலுத்தும் காரணியாக இலங்கை அரசும் அதன்மீது சுமத்தப்பட்டுள்ள மனித உரிமைக் குற்றச்சாட்டுகளையும் முன்நிறுத்தி மேலைத்தேய நாடுகளின் சொல்லுக்கு அடங்க மறுக்கும் இலங்கையின் நிலைப்பாடு செல்வாக்குச் செலுத்தலாம். இங்கு கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில் அமெரிக்க ஐரோப்பிய அரசுகளுக்கு அடங்க மறுக்கும் இலங்கை அரசின் நிலைப்பாடான “உள்நாட்டுப் பிரச்சனையை வெளிநாட்டவரின் தலையீடின்றி நாமே தீர்த்துக்கொள்கிறோம்” என்னும் அதே நிலைப்பாட்டையே ஆண்டகை மல்கம் ரஞ்சித் அவர்களும் கொண்டிருப்பதும் அவருக்கும் இலங்கை அரசுக்கும், அரச தலைவருக்கும் உள்ள உத்தியோகபூர்வ மற்றும் உத்தியோகப்பற்றற்ற உறவுமுறைகளும் சேர்ந்து அவரின் போப் பதவித் தேர்வில் தாக்கத்தைச் செலுத்தவே போகின்றன.

தண்டிக்கப்பட வேண்டும் அல்லது தமது சொல்லுக்கு அடங்க வேண்டும் என்று ஓர் நாட்டின் மீது நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் மேற்குலகு அதே நாட்டிலிருந்து தமது ஆன்மீகத் தலைவரைத் தேர்வு செய்யுமா? என்பது அரசியல், சமூகப், பொருளாதாரக் காரணிகளைத் தவிர்த்து ஆன்மீகம் மட்டும் முன்னிலை பெறும்போது மட்டுமே நடக்கும் போல் தெரிகின்றது.

## சுதந்திரதின வாழ்த்துக்கள்

தில்லைநாதன் பவித்ரன்

தூக்கம் வராத இரவுகளில்
நேர்த்திக் கடன்களுக்காக
உயிரகற்றும் பலியிடங்களில்
காத்துக்கிடக்கிறார்கள் சிலர்

எங்கும் கறுப்புமை பூசிய
இரும்புக்கைகளோடு தயாராக

இழுத்துச் சென்ற
பெண்களின்
முலைகள் கடித்துத் துப்பப்பட்டன
குறிகளும் கிழித்தெறியப்பட்டன
கண்கள் பிடுங்கப்பட்ட
ஆண்கள்
குறி அறுந்தவர்களாய்
எரியூட்டப்படுகின்றனர்

சற்று நேரத்தில்
நானும்
கண்களின்றி
குறியிழந்தவனாக

அதற்கு முன்
நானொரு உண்மையை
சொல்ல வேண்டும்

பலிபீடங்களுக்கு
முன்னிருந்த சிலை
கையில் எவ்வித
ஆயுதங்களையும்
வைத்திருக்கவில்லை
இரத்த வெறிக் கண்கள்
கொடூர பற்கள்
கொலை வெறி முகம்
எதையுமே அது
கொண்டிருக்கவில்லை

உதட்டோர சிரிப்பு
மூடிய கண்கள்
கட்டிய கை
மடிந்த பாதம்
உலகறிந்த வெள்ளை மனம்

உண்மையில் இவ்வாறுதான்

என் குறி அறுத்து இதோ
சிவப்பாக்கப்படுகிறது
அந்தச் சிலை

யாரோ என்னிடம்
கூறுகிறார்கள்
சுதந்திரதின வாழ்த்துக்கள்

# ஜெனீவாவில் மேலெழும் ஈழ மனித உரிமைகள்

## மார்ச் 2012 இலிருந்து மார்ச் 2013 நோக்கி...

மாயன்

கடந்த வாரம் மார்ச் 2012ல் ஜெனிவாவில் கொண்டு வரப்பட்ட இலங்கை மனிதவுரிமைகள் தொடர்பான தீர்மானத்தையும் அதன் பின்னரான காலப்பகுதியில் நடந்த எவ்வெவ் விடயங்களால் அம் மனிதவுரிமைப் பிரேரணை வலுப் பெற்றது என்பதையும் ஆராய்ந்தோம்.

இனி 2013 மார்ச் ஜெனீவாவில் நடைபெறும் மனிதவுரிமைச் சபைக் கூட்டத் தொடரில் நடக்கவிருப்பது என்ன என்பதைப் பார்க்கலாம்.

இப் பந்தியை எழுதிக் கொண்டிருக்கும் போது நான்காவது நாள் அமர்வுகள் நடக்கத் தொடங்கியிருக்கின்றன. எனினும் நடந்தேறிய அமர்வு நாட்களில் இலங்கைக்கு ஆதரவாக இலங்கையின் அமைச்சர் மகிந்த சமரசிங்க வழங்கிய இலங்கையின் தன்னிலை விளக்கத்தைத் தவிர எவருமே பேசவில்லை என்பதைக் குறித்துக் கொள்ள வேண்டும்.

இக்கூட்டத்தொடரில் தற்போதுவரை கலந்துகொண்டு பேசிய முக்கியமானவர்கள் எல்லாம் இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுக்கும் முகமாகவே பேசிச் சென்றுள்ளனர். அவர்களுள் முக்கியமானவர்களாக தென்னாபிரிக்கா, அமெரிக்கா மற்றும் மனித உரிமை ஆணையர் நவநீதம்பிள்ளை ஆகியோரின் உரைகளைக் குறிப்பிடலாம்.

அவர்கள் என்ன பேசினார்கள் என்பதை வரும் வாரம் பார்க்கலாம். ஆனால் 2013ல் என்ன முன்மொழியப் பட்டுள்ளது என்பதும் அது எவ்வாறு நிறைவேற்றப்படப் போகின்றது என்பதையும் கட்டியம் கூறும் உரைகளாகவே மேற்போந்த மூவரின் உரைகளும் உள்ளமை கண்கூடு.

இரண்டாவது முன்மொழிவையும் மனிதவுரிமைச் சபையில் அமெரிக்காவே முன்மொழிய உள்ளது. எனினும் இவ்விரண்டாவது முன்மொழிவானது இலங்கையை “ஒழுங்குமுறையான அல்லது கெட்டியான” அனுகுமுறையொன்றுக்குள் இழுத்துவரும் முயற்சியாகவே இருக்கப் போகின்றது. முதலாவது பிரேரணை 2012ல் அமெரிக்காவால் முன்மொழியப்பட்ட போது அந் நாடு அப் பிரேரணையை நிறைவேற்றச் சவாலான களநிலையைக் கொண்டிருந்தது. அதானால்தானோ என்னவோ அம்முதலாவது பிரேரணையின் மாதிரிப் பிரேரணையிலிருந்த சில கடும் “ஒழுங்குமுறை” நடவடிக்கைகளை நீக்கிய பின்னரே அமெரிக்கா திருத்திய பிரேரணையை முன்மொழிந்து வெற்றியும் பெற்றிருந்தது. ஆனால் தற்பொது மனிதவுரிமைச் சபை முழுவதுமாக அமெரிக்காவின் ஆதரவு நாடுகளினாலேயே நிரம்பியுள்ளது.

ஏனெனில் மூன்றாண்டுக்கால அங்கத்துவத்தை மனிதவுரிமைச் சபையில் இழந்த நாடுகளுள் சீனா, ரஸ்யா, கியூபா ஆகிய இலங்கை ஆதரவு நாடுகள் அடங்குகின்றன. எனவே அடுத்த 2015வரை அமெரிக்கா தடைகளின்றித் தனது எண்ணத்தை ஓட்டிச் செல்லும் இடமாக மனிதவுரிமைச் சபை இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே இலங்கைக்கு எதிரான பிரேரணை வெல்லும் என்பதில் இரண்டாவது கேள்வியில்லை.

ஆனால் அப்பிரேரணையில் சேர்க்கப்பட்டுள்ள விடயங்கள் மிகக் கவனமாகச் சேர்க்கப்பட்டுள்ளன என்பதைப் பார்க்கும் போது அப் பிரேரணை வெறுமனே மனிதவுரிமைச் சபையை மட்டும் குறிவைத்து இயற்றப்படாமல் அதற்கு அப்பாலும் போகும் வண்ணம் தயாரிக்கப் பட்டிருப்பது புலனாகின்றது. ஏனெனில் புதிய பிரேரணையின் எட்டு முன்மொழிவுகளையும் நோக்கினால் அவை 1. ஐ.நாவின், உதவியை இலங்கையின் நல்லிணக்க மற்றும் பொறுப்புக் கூறலில் தடையின்றி ஏற்றுக் கொள்ள வேண்டும். 2. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் 3. காணாமற்போனோரைக் கண்டுபிடிக்கும் விசாரணைகளுக்கென ஆணையாளர் ஒருவரை நியமனஞ் செய்ய வேண்டும். 4. இராணுவத்தினரால் மேற்கொள்ளப் படும் புலிகளுக்கெதிரான விசாரணைகளில் வெளிப்படைத்தன்மை வேண்டும் 5. அரசு வழங்கிய வாக்குறுதிகளைக் காப்பாற்ற வேண்டும். 6. திறந்தொழில் நிபுணர்களின் வருகையைத் தடுக்கக் கூடாது 7. வடக்கு கிழக்கில் இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்து மக்கள் பங்களிப்பை அதிகரிக்க வேண்டும் 8. சிறுபான்மைப் பிரதிநிதிகளுடன் சமாதானச் சகவாழ்வு தொடர்பான கலந்துரையாடல்களை முன்னெடுக்க வேண்டும் ஆகியவையே காணப்படுகின்றன.

இப்பரிந்துரைகளுள் ஒன்றையேனும் அரசு மறுக்குமானால் அம் மறுப்பிற்கு அடிப்படையான காரணம் எதனையும் கூறமுடியாத நிலை காணப்படுகின்றது. இலங்கையின் இறையாண்மையை மீறுகின்றனவா இம் முன்மொழிவுகள் எனப் பார்த்தால் அம்முன்மொழிவுகள் எவையும் 1. இலங்கைக்கோ அல்லது இலங்கையர்களுக்கோ எதிரானவையாக இல்லை 2. அவை இலங்கையின் சட்டம், நீதித்துறை மற்றும் நிறைவேற்று அதிகாரத் துறை போன்றவற்றின் மீது தாக்கம் செலுத்தும் எவ்விதமான உள்நோக்கங்களுடனும் வரையப்பட்டிருக்கவும் இல்லை.

எனவே இறையாண்மையைக் காரணங்காட்டி எச் சந்தர்ப்பத்திலும் இம் முன்மொழிவுகளை இலங்கை மறுக்காதிருக்கத் தக்கதாகவே அவை வரையப்பட்டுள்ளன. இங்கு முதலாவதும் ஆறாவதும் முன் மொழிவுகள் இலங்கையின் மீது திணிக்கப்பட்டால் அவை இரண்டு முக்கிய நிகழ்வுகளுக்கு வழிவகுக்கும். அவை முறையே சர்வதேசக் குழுவொன்றால் உண்மையை அறியும் பொறிமுறையின் உருவாக்கத்திற்கும் அடுத்தது அவர்களால் மேற்கொள்ளக்கூடிய தடயவியல் மற்றும் குற்றவியல் விசாரணைக்கும் வழிவகுக்கும். (மிகுதி அடுத்த வாரம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹலால் பொறுப்பு ..

இனங்களுக்கிடையே முறுகலை ''ஹலால்'' தோற்றுவிக்குமாயின் அவ்வாறு நிகழ்வதை ஒருபோதும் உலமாசபை விரும்பாது என அறிவித்துள்ள ஜம்மியத்துள் உலமா ஹலால் சான்றிதழை வழங்கும் பொறுப்பை அரசு ஏற்றுக்கொண்டு அதனைச் சகல சமூகங்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் நடைமுறைப்படுத்தவும் வேண்டும் என தெரிவித்துள்ளது.

## வெடிப்பொருட்கள்..

இவ் வெடிப்பொருள்கள் சக்திவாய்ந்த கையெறி குண்டுகள் கிறனேட் உந்து செலுத்திக் குண்டுகள், நிலக்கண்ணி, கிளைமோர்கள் உட்பட இயந்திர துப்பாக்கிச் சன்னங்கள் போன்றவையும் மீட்கப்பட்டுள்ளன.



## சிறுமி பலாத்காரம்..

எனும் செய்தியை இணையத்தளமொன்று வெளியிட்டுள்ளது. 17ம் திகதி மாலை நிகழந்த இச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குழந்தைச் சிறுமி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சிறுவன் குமரக்கடவைக் காவல்த்துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பிரியந்த பத்திரண தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயம்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிரியந்த பத்திரண தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயம் அடைந்துள்ளதாக தகவல் கசிந்துள்ளது.

திருமலைப் பொது வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இவர் மேலதிகச் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் தெரியவருகிறது. மற்றொரு மாகாண சபை உறுப்பினரின் மகனினாலேயே இவர் தாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது.

## தட்டெழுத்து நிபுணர்களாகும் திருமலை அரச அலுவலர்கள்

கிழக்கு மாகாண சபையின் அரச அலுவலர்களை தட்டெழுத்து நிபுணர்களாக்கும் பயிற்சி நெறியொன்றை கிழக்கு மாகாணசபை முகாமை அபிவிருத்தி பயிற்சித் திணைக்களம் நடாத்தி முடித்துள்ளது மூன்று நாட் பயிற்சியாக நடைபெற்ற இப்பயிற்சி நெறியானது 26.02.2013 அத் திணைக்களத்தின் பயிற்சிக் கூடத்தில் ஆரம்பமாகியது. திருமதி ஜமுனா தயாரூபன் மற்றும் சுஜாதா வரதகுமார் ஆகியோரால் நடாத்தப்பட்ட இப் பயிற்சி நெறியில் இருபது அரச அலுவலர்கள் பங்கேற்றனர்.

## காயமடைந்த மீனவரை..

மீன் பிடிக்கப் புறப்பட்ட "புளூ ஓசன் - 3" எனும் ரோலர் படகின் மின் கலத்தில் ஏற்பட்ட கோளாரைச் சரிசெய்ய முயன்றபோது ஏற்பட்ட வெடிவிபத்தில் படகு பயணிக்க முடியாத நிலைக்கு வந்துள்ளதுடன் மீனவரொருவரும் கண்ணில் படுகாயமடைந்துள்ளார்.

தகவலின் பின் விரைந்த கடற்படை மீனவரை மீட்டு திருமலை கடற்படை வைத்தியசாலையில் ஆரம்ப மருத்துவ சிகிச்சைகளை வழங்கிய பின் திருமலைப் பொதுவைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுமதித்துள்ளது.



## கிழக்கு மாகாண அரச திணைக்களங்களை மேற்பார்வை செய்ய மேற்பார்வையாளர்கள் நியமனம்

கிழக்கு மாகாண சபையின் கீழுள்ள திணைக்களங்களின் வினைத்திறனையும் செயற்பாடுகளையும் மேற்பார்வை செய்ய மாகாண சபை உறுப்பினர்கள் மேற்பார்வையாளர்களாக நியமனம் பெற்றுள்ளனர். பதினைந்து கிழக்கு மாகாணத் திணைக்களங்களிற்கும் பதினைந்து மாகாண சபை உறுப்பினர்கள் நியமனமாகி உள்ளனர்.

ஆளுங்கட்சி மாகாண சபை உறுப்பினர்களே இந் நியமனத்திற்கென தேர்வாகியுள்ளனர். அதனடிப்படையில் முறையே மாகாண சபை உறுப்பினரான ஏ.ஏ.எம். ஜமீல் - உள்ளூராட்சி, ஏ.எல். தவம் - கிராம அபிவிருத்தி, எஸ். சந்திரன் - வீதி அபிவிருத்தி, எம்.ஜே. விஜயசேகர - கட்டிடம், எம்.எஸ்.எஸ். அமீர் அலி - நீர்ப்பாசனம், எம்.எல்.எம். அமீர் - கல்வி, எம்.ஆர். அன்வர் - காணி காணி அபிவிருத்தி, கே.பி.பி. பிரேமகுமார - கலாசார விவகாரம், ஏ.எல்.எம். நசீர் - சுகாதாரம், டீ.எம். ஜெயசேன - சிறுவர் நன்னடத்தை குழந்தைகள் காப்பு, ஆரிவ் சம்சுதீன் - விளையாட்டு, கூட்டுறவு விருத்தி,





டீ. வீரசிங்க - சுதேச வைத்தியம், ஏ.எவ். சில்மி - சமூக சேவை, ஹசன் மௌவி - கிராமிய தொழிற்துறை, டீ. நவரட்ணராசா, விவசாயம் ஆகிய திணைக்களங்களை முறையே மேற்பார்வை செய்யவுள்ளனர்.

இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் ஒவ்வொரு திணைக்களத்தினதும் செயற்பாடுகள், வினைத்திறன்கள், தடைகள், எதிர்காலத் திட்டங்கள் தொடர்பான விரிவான அறிக்கைகளை மாகாண சபையின் முதலமைச்சருக்கு வழங்கவுள்ளனர்.

## பீப்பிள்ஸ் பினான்ஸ்..

நிறுவனத்தை பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் நிறுவனத்துடன் இணைக்கும் அறிவித்தல் வர்த்தமானியிடப்பட்டுள்ளது. இவ் இணைப்பினால் பீப்பிள்ஸ் பினான்ஸ் நிறுவனப் பங்காளர் ஒவ்வொருவரும் தாம் வைத்திருக்கும் ஒவ்வொரு பங்குகளுக்கும் பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி யின் மூன்று பங்குகளைப் பெறவுள்ளனர்.

பங்காளர் அனைவரும் அங்கீகரிக்கும் பட்சத்தில் ஒன்றிணைக்கப்பட்ட கம்பனி புதிய பெயருடன் ஏப்ரல் மாதத்திலிருந்து தொழிப்படும் எனத் தெரியவருகின்றது.

## குவைத் வாகன விபத்து..

தகவல் வெளியாகியுள்ளது.

தோப்பூர் 07ம் வட்டாரத்தைச் சேர்ந்த ஹலீலூஸ் ர்ஹ்மான் றமீஸ் எனும் இருபத்தேழு வயதுடைய இளைஞனே பலியாகியுள்ளார். குவைத்தில் தொழிலாற்றி வந்த மேற்படி இளைஞன் இப்பயணத்தை மேற்கொண்டதன் நிமித்தம் தெளிவாகவில்லை.

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன..

இருபத்தைந்து வயதிற்குட்பட்ட விவாகமாகாத 2011ம் ஆண்டில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி மூன்று பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். அத்துடன் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் மூன்று திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருக்க வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 22.02.2013ல் வெளியான வர்த்தமானியை உசாத்துணையவும்.

## ஆசிரியர்கள் நியமனம்..

மாவட்டம் ஒன்றிற்கு சுமார் நாநூற்று ஐம்பது ஆசிரியர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். இதற்கென கிழக்கில் கடந்த 16ம் திகதி எழுத்துப் பரீட்சைகள் நடாத்தப்பட்டன. கிடைக்கப்பெற்ற பத்தாயிரம் பட்டதாரிகளின் விண்ணப்பத்தில் ஆறாயிரத்து என்னூறு பேர் பரீட்சைகளுக்குத் தோற்றியிருந்தனர். இவர்களுள் மாவட்டமொன்றிற்கு சுமார் நாநூற்று ஐம்பது பேர் நியமனம் பெறவுள்ளனர். எனினும் மாகாணம் முழுவதற்கும் பொது வெட்டுப்புள்ளியா அல்லது ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் தனித்தனி வெட்டுப்புள்ளியா நியமனத் தேர்வின்போது கருத்திற்கொள்ளப்படவுள்ளது என்பது தொடர்பாக கருத்துரைக்க எவராலும் முடியவில்லை.

## மாடுகள் அறுக்கத் தடை

கண்டி மாநகர சபை எல்லைக்குள் மாடுகளை இறைச்சிக்காக அறுப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை மார்ச் மாதம் 15 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும். கண்டி மாநகர சபைக்கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்திற்கு மாநகர சபையில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் உறுப்பினர்கள் மூவரும் எதிர்ப்பினை தெரிவித்துள்ளனர்.

## புறாமலை ...

புறாமலைத் தேசியப் பூங்காவை உல்லாசப் பயண விடுதிகளை அமைப்பதற்கு வழங்கவுள்ளதாகச் செய்திகள் வெளியாகி அதிர்ச்சியைத் தந்துள்ளது.

திருக்கோணமலையின் பிரபல்யமான இயற்கை வளம் கொலிக்கும் சுற்றுலாப் பயண இடங்களில் புறாமலையும் ஒன்று. செறிந்த இயற்கை உயிரியல் வளங்களைக் கொண்ட புறாமலையில் பவளப் பாறைகளும் அழகிய மீன் இனங்களும் பெருமளவில் காணப்படுவதால் உலகப் பிரசித்தம் பெற்ற இடமாகவும், திருமலைக்குப் பெருமை சேர்க்கும் இடமாகவும் புறாமலை காணப்படுகின்றது.

இலங்கையின் தேசியப் பூங்காவாக 2003ம் ஆண்டில் புறாமலை அறிவிக்கப்பட்டது. எனினும் நாட்டின் வன்செயல் நிலை காரணமாக இப் பூங்கா 2011ம் ஆண்டிலேயே திறந்துவிடப்பட்டது.

தேசியப் பூங்காவாக வர்த்தமானப் பத்திரிகையில் அறிவித்தல் விடப்பட்டிருந்ததால் முதற்கட்டமாக அவ் அறிவிப்பை இல்லாதொழிக்கும் அறிவித்தலை விடுக்க முனைப்புக்கள் பல்வேறு மட்டங்களிலும் காட்டப்பட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் அம் முனைப்புக்களிற்கு எதிராகச் சூழலியலாளர்களும், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினரும் கடும் எதிர்ப்பை வெளிக்காட்டி, வருகின்றனர். செலவுகள் எவையுமின்றிப் பெருமளவு வருமானம் உழைக்கும் ஓரிடமாகப் புறாமலை காணப்படுகின்றது.

மே மாதம் 2011ல் திறந்து விடப்பட்ட இப் பூங்காவினால் வனசீவராசிகள் திணைக்களம் அவ்வாண்டில் உழைத்த வருமானம் சுமார் 9.8 மில்லின் ரூபாய்கள் ஆகும். இவ்வருமானம் 2012ம் ஆண்டில் இருமடங்காகியது.

இலங்கையில் சுற்றுச்சூழல் சட்டப்படி தேசியப் பூங்காக்களின் அருகே ஒரு மைல் சுற்றளவானது பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதனால் புறாமலையை தேசியப் பூங்கா என்ற அந்தஸ்திலிருந்து தரமிறக்கினால் மட்டுமே உல்லாச விடுதி நிர்மாணம் சாத்தியமாகும். இதனாலேயே தற்போது புறாமலையைத் தேசியப் பூங்கா என்னும் தகுதியிலிருந்து இறக்கும் முதற்கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

எனினும் தேசியப் பூங்காவின் தரத்தைக் குறைக்க வேண்டுமாயின் ஓரிடம் தேசியப் பூங்காவாக அறிவிக்கப்பட்ட காலத்திலிருந்து பின்வரும் காலங்களில் அத் தேசியப் பூங்காவின் பெறுமதி தொடர்ந்தும் குறைவடைய வேண்டும் என விலங்கினங்கள் மற்றும் பாலூட்டிகள் தடுப்புச் சட்டம் தெரிவிக்கின்றது. அவ்வாறு பெறுமதிக் குறைவை நிரூபிக்கும் கடப்பாடும் வனசீவராசிகள் திணைக்களத்திற்கே உள்ளது. அவ்வாறு நிரூபிக்கப்பட்ட பின் தரமிறக்கும் தீர்மானம் மந்திரிசபையாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.


எனினும் வனசீவராசிகள் திணைக்களப் பணிப்பாளரோ அல்லது கமநலசேவைகள் மற்றும் வனவள அமைச்சரோ அவ்வாறு தரமிறக்கும் முயற்சிகள் எவையும் தற்போதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## எமது மூளை எப்படிப்பட்டது

- மனித மூளையில் 100000000000 பில்லியன் செல்கள் உள்ளன.
- எமது சுவாசம் மூலம் பெறும் ஒட்சிசனில் இருபது சதவீதம் மட்டுமே மூளை பயன்படுத்துகிறது.
- நாம் பதினொரு வயதை அடையும்போது மூளை முழு வளர்ச்சி அடைகிறது.
- மனிதன் இருபது வயதை அடையும்போது மூளை முழுமையாக சிந்திக்கத் தொடங்கும்.
- மனிதனுக்கு முப்பத்தைந்து வயது தாண்டும்போது ஒரு நாளைக்கு நம் மூளையில் உள்ள ஏழாயிரம் மூளை செல்கள் அழிந்து விடுகின்றன. மீண்டும் அவை உருவாகாது.
- மூளை, என்பது சதவீதம் நீரால் ஆனது.
- மூளை பகல் நேரத்தை விட இரவு நேரத்தில் அதிக சுறுசுறுப்பாகவும் அதிக சிந்தனை திறனுடைனும் இருக்கும்.
- மூளைக்கு தன் வலியை உணரும் திறன் சிடையாது.




### மூளையை பாதிக்கும் விடயங்கள்

- காலையில் உணவு உண்ணாமை
- மிக அதிகமாக சாப்பிடுவது.
- புகைப்பிடித்தல், மருவருந்தல்.
- தூக்கமின்மை
- தொடர்ச்சியான அழுகை.
- சிந்தனை செய்யாருத்தல்.

## கடன் வாங்கிய ஏழை

முல்லா ஒரு நாள் ஒரு பெரிய பணக்காரரிடம் சென்றார். "ஒரு மனிதனுடைய கஷ்ட நிலைகண்டு மனம் பொறாமால் தங்களிடம் வந்திருக்கிறேன். அந்த மனிதன் ஒரு பணக்காரரிடம் கொஞ்சம் பணத்தை கடனாக வாங்கிவிட்டான் அது இப்பொழுது வட்டிக்கு வட்டியெனக் கூடி இனறு இத்தொகையினைத் திருப்பிக்கொடுக்க முடியாது தினறுகின்றான். அவன் தற்கொலை செய்து விடுவானோ என்று கூட எனக்குப்பயமாக இருக்கின்றது. நீங்கள் ஒரு ஆயிரம் பொற்காசுகள் அந்த மனிதனுக்கு அவனின் கடனை அடைப்பதற்கு கொடுத்தால் அவன் உரிய காலத்தில் அதைத் திருப்பிக் கொடுத்து விடுவான். அதற்கு நான் உத்தரவாதம் தருகிறேன்" என்று முல்லா மிகவும் உருக்கமாகக் கூறினார்.

அதைக்கேட்டு மனம் உருகிய செல்வந்தர் முல்லாவிடம் ஆயிரம் பொற்காசுகளைக் கொடுத்து "அவ்வளவு க்'டப்படும் மனிதன் யார்?" என்று கேட்டார். "வேறு யாருமல்ல நான்தான்" என்று கூறிச்சிரித்தவாறு முல்லா சென்று விட்டார். இரண்டொரு மாதங்கள் கழித்து முல்லா அப்பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டார். இரண்டொரு மாதங்கள் கழிந்தபின்பு மீண்டும் ஒருநாள் முல்லா அப்பணக்காரரிடம் வந்தார். "யாரோ ஒருவர் பணம் வாங்கிக் க்'டப்படுகின்றாராக்கும் அதை என்னிடம் வாங்கிக் கொடுக்க வந்நிருகின்றீராக்கும்" என்றார் செல்வந்தர். "ஆமாம்" என்றார் முல்லா. "அந்தக் க்'டப்படும் ஆள் நீர்தானே" என்று செல்வந்தர் கேட்டார். "இல்லை உண்ணமை-யிலையே ஒரு ஏழைதான் வாங்கிய கடனைக் கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகின்றான்" என்றார் முல்லா. "உம்மை எவ்வாறு நம்புவது பணத்தை வாங்கிய பின் "நான்தான் அந்த ஏழை" என்று கூறமாட்டீர் என்பதற்கு என்ன நிச்சயம்" என்று செல்வந்தர் கேட்டார். "நீங்கள் இவ்வாறு கூறுவீர்கள் என்று தெரிந்துதான் அந்த ஆளை நேரில் கொண்டு வந்து வாசலில் நிறுத்தியிருக்கிறேன்" என்றார் முல்லா. பிறகு வாசல்ப்பக்கம் சென்று ஒரு ஏழையை அழைத்து வந்தார். "நீர்தான் கடன் வாங்கி க்'டப்படும் ஏழையா?" என்று கேட்டார் செல்வந்தர். "ஆமாம்" என்று அந்த ஏழை பதில் சொன்னான். செல்வந்தர் முல்லா சொன்ன தொகையினை ஏழையிடம் நீட்டினார். அதனை முல்லா கை நீட்டி வாங்கிக்கொண்டார். "என்ன பணத்தை நீர் வாங்குகிறீர் பளையபடி என்னை ஏமாற்றுகிறீரா?" என செல்வந்தர் கேட்டார். "நான் பொய் சொல்ல வில்லையே கடன்வாங்கியது அந்த ஏழைதான் ஆனால் கடன் கொடுத்தவன் நான். கொடுத்த கடனை இப்பொழுது வசூல் செய்கிறேன்" என்று கூறியவாறு ஏழையை அழைத்துக்கொண்டு முல்லா நடந்தார்.




## அழகுக் குறிப்புகள்..



* வெள்ளரிச்சாறு, சந்தனப்பொடி, கடலைமாவு மூன்றையும் சம அளவு கலந்து முகம், கை கால்களுக்கு தினமும் போட்டு வந்தால் முகம் பிரகாசமாக இருக்கும்.

* ஒரு லிட்டர் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெயில் நெல்லிக்காய் பொடி, தான்றிக்காய் பொடி, மருதாணி பொடி, கறிவேப்பிலை பொடி, கரிசலாங்கண்ணி பொடி, வெட்டிவேர், ரோஜா இதழ்கள், சந்தன பொடி ஆகியவை தலா 10 கிராம் சேர்த்து, எண்ணெயில் போட்டு கொதிக்க வைக்கவும். இந்த கலவையை நாலு நாள் வெயிலில் வைக்க வேண்டும். சூரிய கதிர்கள் பட்டு எண்ணெயில் எசன்ஸ் இறங்கும். பின் வெள்ளைத் துணியில், அதை வடிகட்டவும். குளிக்கும் முன் இதை தலையில், தேய்த்து வந்தால், முடி உதிர்தல், நரைமுடி குறையும், செம்பட்டை முடி கருமையாகும், பொடுகு நீங்கும்.

* நாம் சாப்பிடும் உணவு மூலமாகவே அழகை அதிகப்படுத்திக் காட்டலாம். பேலன்ஸ்டு டயட் என்பது மிக மிக அவசியம். வைட்டமின்கள், தாதுப் பொருட்களை உணவில் சேர்த்து கொள்ள வேண்டும். காய்கறி, பழங்களையும் அதிகளவில் சாப்பிட வேண்டும்.

## எந்த நிற ஆடையை அணிவது..

மாநிறம், வெளிர் சிகப்பு, நல்ல சிகப்பான தோற்றம் கொண்டவர்கள், அடர்த்தியான நிறப்புடவைகளையோ, சுடிதார், ஸ்காட் போன்ற ஆடைகளையோ அணிந்தால் தோற்றப்பொலிவு அதிகரித்து மிளிர்வர்.

சற்றே நிறம் கம்மியாக இருப்பவர்கள் அல்லது கருப்பாக இருப்பவர்களானால், பெரும்பாலும் லேசான வண்ணங்களிலான (லைட் கலர்) ஆடைகளைத் தேர்வு செய்தால் அவர்களின் தோற்றம் எடுப்பாகி தனி அழகு பிறக்கும்.






கூடிய வரை கருப்பாக இருப்பவர்கள் வெளிர் நீலம், வெளிர் பச்சை, வெளிர் ரோஸ், வைலட் போன்ற அதிகம் கலர் காம்பினே'ன் இல்லாத வண்ணங்களிலான ஆடைகளைத் தேர்வு செய்து அணிந்தால் அவர்களின் அழகு மேலும் அதிகரித்து மின்னுவர்கள்.

## வாழைத்தண்டு குழம்பு

***தேவையானவ்வ:*** பாசிப்பருப்பு - அரை கப், வாழைத்தண்டு (மீடியம் சைஸ்) - ஒன்று, வெங்காயம் (நறுக்கிக் கொள்ளவும்) - 1, பச்சை மிளகாய் - 3, காய்ச்சிய பால் - கால் கப், சீரகம் - அரை டீஸ்பூன், பூண்டு - 2 பல், கறிவேப்பிலை - சிறிதளவு, உப்பு - தேவையான அளவு.

***செய்முறை:*** பாசிப்பருப்பை நன்கு வேக வைத்துக் கொள்ளவும். வாழைத்தண்டை நார் நீக்கி, பொடியாக நறுக்கவும். நறுக்கிய வாழைத்தண்டு, வெங்காயம், கீறிய பச்சை மிளகாய், உப்பு ஆகியவற்றை குக்கரில் சேர்த்து, ஒரு கப் தண்ணீர் ஊற்றி வேக வைத்து, 2 விசில் வந்ததும் இறக்கவும். ஆறியதும் திறந்து, அதனை வேக வைத்த பாசிப்பருப்புடன் சேர்த்து, சில நிமிடங்கள் கொதிக்க விடவும். பிறகு. நசுக்கிய பூண்டு, சீரகம், கறிவேப்பிலை, பால் சேர்த்துக் கிளறி பரிமாறவும்.



## மோர்க் குழும்பு

***தேவையானவை:*** பச்சரிசி - ஒன்றரை கப், புழுங்கல் அரிசி, அவல் - தலா அரை கப், உளுந்து - கால் கப், வெந்தயம் - அரை டீஸ்பூன், சர்க்கரை - ஒரு டீஸ்பூன், உப்பு - தேவையான அளவு.

செய்முறை: பச்சரி, புழுங்கல் அரிசி, உளுந்து, வெந்தயம் ஆகியவற்றை ஒன்றாக ஊற வைக்கவும். அவலை தனியாக ஊற வைக்கவும். ஒரு மணி நேரம் நன்கு ஊறியதும், எல்லாவற்றையும் ஒன்றாக்கி, நைஸாக அரைத்து, உப்பு சேர்த்துப் புளிக்க விடவும். புளித்ததும், சர்க்கரை சேர்த்துக் கலக்கவும். மிதமான தீயில் தோசைக்கல்லை வைத்து, ஒரு கரண்டி மாவு விட்டு, ஊத்தப்பம் போல் வார்த்து மூடியால் மூடவும். வெந்ததும், திருப்பிப் போடாமல் அப்படியே எடுக்க அவல் தோசை ரெடி! இதேபோல் ஒவ்வொரு அவல் தோசையையும் தயார் செய்யவும்


மோர்க்குழம்பு



## அவல் தோசை

***தேவையானவை:*** புளிப்பில்லாத தயிர் - ஒரு கப், பொட்டுக்கடலை மாவு - 3 டீஸ்பூன், மஞ்சள்தூள் - ஒரு சிட்டிகை, பெருங்காயத்தூள் - கால் டீஸ்பூன், கடுகு, வெந்தயம், ஓமம் - தலா கால் டீஸ்பூன், பச்சை மிளகாய் - 3, உப்பு - தேவையான அளவு.

***செய்முறை:*** தயிரை நன்கு கடைந்து, கொஞ்சம் தண்ணீர், மஞ்சள் தூள், பெருங்காயத்தூள், உப்பு, பொட்டுக்கடலை மாவு சேர்த்துக் கரைக்கவும். வெறும் கடாயில், கடுகு, வெந்தயம், ஓமம், கீறிய பச்சை மிளகாய் சேர்த்துத் தாளிக்கவும். பிறகு, மோர் கலவையை சேர்த்து.. கிளறியவாறே இரண்டு நிமிடம் கொதிக்க வைத்து இறக்கவும். ஏதாவது காய்கள் சேர்ப்பதாக இருந்தால் தனியே வேக வைத்து சேர்க்கவும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times:

### இலங்கைக்கு இந்தியத் தொழிலாளர்கள்

வடக்கு கிழக்கில் நிகழும் ஊழியர் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு இந்தியத் தொழிலாளர்களை வேலைக்கென இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட வேண்டும் என அமைச்சர் மஹிந்த யாப்பா அபயவர்த்தன தெரிவித்துள்ளார். வட கிழக்கில் அருவி வெட்டுவதற்கு இத்தொழிலாளர்களைப் பயன்படுத்தும் திட்டம் உள்ளது. மேற்காசியா, சிங்கப்பூர், வடகொரியா மற்றும் இத்தாலி நோக்கி இலங்கையர்கள் கூலிகளாக நகர்வதால் இவ்வாறு தொழிலாளிகளை இந்தியாவிலிருந்து இறக்குவதைத் தவிர வேறு வழியில்லை என அமைச்சர் மேலும் தெரிவித்தார். இலங்கைக்குள் பயண அனுமதியில் வரும் இந்தியர்கள் வயல் வெட்டுக்கு பயன்படுத்தப்படுவது தற்போது பெருகியுள்ளது என தெரிவித்த அவர், இவ்விடயம் தொடர்பாக கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போதே ஊழியத்தட்டுப்பாடு தெரியவந்ததாக தெரிவித்தார். இதன் பின்னணியிலேயே 3 மாத வேலை அனுமதியை வழங்க முடிவெடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார். அம்பாறை, மட்டக்களப்பு, கிளிநொச்சி, பொலநறுவை, திருக்கோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் தென்னிந்தியத் தொழிலாளிகளை வேலைக்கமர்த்துவதற்கு அந்தந்த மாவட்டச் செயலாளர்களிடம் கோரியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

### போராட்டத்தைக் கைவிட்ட தேவானந்தா

**5000** படகுகளை பாக்குநீரிணையில் நிறுத்தி இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறலை எதிர்த்து போராட்டம் நடாத்தும் திட்டத்தை திடீரென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கைவிட்டார். இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக்கானந்தா அவர்களின் யாழ்ப்பாண வருகையாலும் இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் சர்வதேச கடல் எல்லையில் இந்திய கரையோரப் பாதுகாப்பு கடற்படை களங்களின் பிரசன்னத்தாலும் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்குப் பதிலாக இந்திய அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடாத்தப்படும் என டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். "இலங்கையின் கடற்பரப்பில் அத்துமீறி நுழைவதையும் சட்டவிரோத முறையில் மீன்களைப் பிடிப்பதைக் கைவிடும்படியும் இறுதி எச்சரிக்கையை விடுத்துள்ளேன். அத்துடன் கச்சதீவு ஆலயத்தின் பெருவிழா தற்போது நடைபெறுவதால் ஒரு மாத காலம் வரை இந்த ஆர்ப்பாட்டத்தை பின்தள்ளியுள்ளேன்." என அவர் மேலும் தெரிவித்தார்.

### சீருடை மற்றும் அடையாள அட்டையுடன் கூவி விற்பவர்கள்

பேரூந்து மற்றும் தொடரூந்துகளில் கூவி விற்கும் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் எதிர்வரும் மாதம் முதல் உரிய சீருடை மற்றும் அடையாள அட்டை அணிந்திருக்க வேண்டும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அலுவலர் ஒருவர் தெரிவித்தார். இதற்கும் மேலதிகமாக அவர்களுக்கு அதிவேக மூன்று நாள் பயிற்சி வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். சுமார் 2500 கூவி விற்பவர்கள் தற்போது வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதாக தெரியவந்துள்ளது. அவர்களது நடத்தைகள் சீராக்கப்பட வேண்டும் என அவ்வலுவலர் மேலும் தெரிவித்தார்.

### முரண்பாடுகள் முத்திப்போனது மாலைதீவில் – தொலைக்காட்சி ஊடகவியலாளர் தாக்கப்பட்டார்

மாலைதீவின் தலைநகர் மாலேயில் கைகலப்புக்கள் அதிகரித்துள்ள நிலையில் அதில் சிக்கி படுகாயமடைந்த தொலைக்காட்சி ஊடகவியலாளர் ஒருவர் அவசர சிகிச்சைகளுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளார். ராஜி தொலைக்காட்சியின் செய்திப் பிரிவின் தலைவரான இப்ரஹிம் வாஹிட் அடையாளம் தெரியாத குழுவினரால் தலையில் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளார்.

## The Sunday Observer:

### இலங்கைக் கடற்படையினால் மியன்மார் அகதிகளின் மீட்பு செயற்பாட்டை ஐக்கிய நாடுகளின் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் பாராட்டியுள்ளது.

"மியன்மாரிலிருந்து அகதிகளாகக் கடலில் புறப்பட்டு அந்தரித்திருந்த மக்களை காப்பாற்றி அவர்களுக்குரிய மருத்துவ வசதிகளையும் மிக வேகமாக மேற்கொண்ட இலங்கைக் கடற்படையின் மீட்புப்பணியை ஐக்கிய நாடுகளின் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் பாராட்டியுள்ளது" என அவ்வமைப்பின் பேச்சாளர் அன்ரே மஹேகிக் ஜெனிவாவில் பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார். இவ்வாறு மீட்கப்பட்டுள்ள மியன்மார் அகதிகளில் யாருக்காவது சர்வதேச பாதுகாப்பு தேவைப்படுமாயின் அதனை மேற்கொள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் தயாராயிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### இலங்கைக்கு வந்திருந்தால் உண்மை தெரிந்திருக்கும் – சஜின் வாஸ் குணவர்த்தன

காலி மாவட்டத்தின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சஜின் வாஸ் குணவர்த்தன "ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை அவர்கள் எமது அழைப்பை ஏற்று இலங்கைக்கு வருகை தந்திருந்தால் தற்போது இலங்கையிலுள்ள உண்மை நிலவரத்தை புரிந்து கொண்டிருப்பார்." என தெரிவித்துள்ளார். இலங்கை அரசு அதன் மீது எழுப்பப்படும் குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ள தயாராயுள்ளதா என்ற கேள்விக்கு பதிலளிக்கும் போது இலங்கை அரசின் மீது மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான குற்றச்சாட்டுக்களுக்கு வழங்கப்பட்ட பதிலின் ஊடாக அவை வலுவிழந்து விட்டன என தெரிவித்தார். "வெளிநாட்டு அரசாங்கங்கள் மனித உரிமை எனும் ஆயுதத்தைக் கொண்டு சில நாடுகளை நிர்மூலமாக்கும் நடவடிக்கைகளில் உள்ளது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்." என அவர் மேலும் தெரிவித்தார்.

### விடுதலைப் புலிகளின் ஒலிபெருக்கியாக சனல் – 04 செயற்படுகிறது

இலண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் சனல் - 04 தொலைக்காட்சி நிறுவனமானது வெளிநாட்டில் இயங்கும் விடுதலைப்புலிகளின் ஒலிபெருக்கியாக தொழிற்படுகிறது. இலங்கைக்குச் சேறு பூசும் நடவடிக்கையாக செயற்படும் இத்தொலைக்காட்சிக்கு இலண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் நிதி பெருமளவில் பயன்படுகிறது. இக்கோழைத்தனமான செயற்பாட்டிற்கு பிரித்தானியாவிலும் ஐரோப்பாவிலும் திரட்டப்படும் பணத்தில் 300,000 அமெரிக்க டொலர்கள் வருடாந்தம் இத்தொலைக்காட்சிச் சேவைக்கு வழங்கப்படுவதாக நம்பத்தகு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சனல் - 04 தொலைக்காட்சியின் பிரதம ஆசிரியரும் அளிக்கையாளருமான சிராணி சபாரட்னம், யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். இவர் ஜூன் 5, 2011 இல் இலங்கைக்குள் நுழைய முற்பட்ட வேளை தடுத்துப் பின் திருப்பியனுப்பப்பட்டார். அவர் முன்னாள் போராளி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அந்நேரத்தில் அவருடன் பயணம் செய்த அவரது பிரித்தானிய கணவன் இலங்கையின் சர்வதேச விமான நிலையத்தில் காணாமல் போயிருந்தார். அவர் சனல் - 04 இன் பணிப்பாளர்களில் ஒருவர். அவர் எவ்வாறு திரும்பிச் சென்றார் என்பது தெரியாமலுள்ளது.

### கைதாகிய மீனவர்களை விடுவித்தது இந்திய கடலோர காவல்படை

கடல் எல்லையை மீறிய குற்றச்சாட்டில் கைதாகிய 21 மீனவர்களை இந்திய கடலோர காவல்படை விடுவித்துள்ளது. அவர்களுடன் அவர்களது நான்கு படகுகளும் விடுவிக்கப்பட்டன. அவர்களை காங்கேசன் துறையில் கையளித்தது இந்தியப்படை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Leader

### சுதந்திர விசாரணையை வேண்டி நிற்கும் ஐரோப்பிய ஒன்றியம்

போரின் இறுதி ஆண்டுகளில் நடைபெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கும் அளவிடுவதற்கும் தேசிய விசாரணைக்கு மேலதிகமாக சுதந்திரமான சர்வதேச விசாரணை ஒன்றை நடத்த வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது. தென்னாசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான ஐரோப்பிய பாராளுமன்ற பிரதிநிதி ஜேன் லம்பேர்ட் அவர்கள் வழங்கிய செவ்வியில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் மேற்கொள்ளப்படும் உயிர் அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் தொடர்பான அறிக்கைகளையும் தாம் பெற்று வருவதாகவும், இவற்றை மேற்கொள்பவர்களை உரியவர்கள் அடையாளம் கண்டு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

அண்மையில் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை ஒன்றில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைச் சபை இலங்கையின் பொறுப்பளிக்கும் கடப்பாட்டையும் நல்லிணக்கத்தையும் மீள வலியுறுத்த வேண்டும் என வேண்டி நிற்கின்றது. கடந்த வருடத்தில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தான் வரவேற்பதாகவும் அதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் நம்பிக்கை தருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். 2009ம் ஆண்டிற்குப் பின் யுத்தப்பிரதேசங்களில் உட்கட்டுமான அபிவிருத்தி, தொழில் வாய்ப்பு, சமூக அபிவிருத்தி போன்றவற்றில் அரசு மேற்கொண்டுள்ள முதலீடுகள் பாராட்டத்தக்கதாக உள்ளதாக அவர் கூறிய போதிலும் தற்போது வரை தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவால் முன்மொழியப்பட்ட எவ்வித நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளாது உள்ளது கவலை அளிப்பதாக அவர் தெரிவித்தார்.

### மாத்தளை மனிதப் புதைகுழி தொடர்பாக சுதந்திர விசாரணையை ஐக்கிய நாடுகள் சபை முன்மொழிகிறது.

மாத்தளையில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஐக்கிய நாடுகள் சபை முன்வர வேண்டும் எனும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆசிய சட்டவள நிலையம் எனும் இலாப நோக்கற்ற நிறுவனமானது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் சபைக்கு எழுத்து மூலம் இக்கோரிக்கையை முன்வைத்துள்ளது. கட்டாயக் கடத்தலில் காணாமற் போனவர்கள் தொடர்பான ஐக்கியநாடுகள் சபையின் செயற்பாட்டுக் குழுவின் நிபுணர்கள் இம்மாத்தளை புதைகுழியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பாக தற்போதுள்ள நிலைமையை ஆராய்ந்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அதற்கான அனைத்து உதவிகளையும் இலங்கை அரசாங்கம் வழங்க வேண்டும் எனவும் இவ்வமைப்பு மேலும் கோரியுள்ளது.

### ஏறாவூரில் பயிர்ச்செய்கையைப் பாதித்தது டெங்கு நுளம்பு மருந்து

ஏறாவூரில் எழுந்தமானமாக விசிறப்பட்ட டெங்கு நுளம்பு மருந்தானது ஏறாவூர் விவசாயிகளின் பயிர்ச்செய்கைகளை பாதித்துள்ளதாக தெரிவித்துள்ளனர். ஏறாவூரில் உள்ள 9000 கிணறுகளுக்கு விசிறப்பட்ட மெட்டா :.போஸ் எனும் மருந்தே இத்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு விசிறும் போது சூழலியளாளர்கள், விவசாய வளவாளர்கள் போன்றோரிடம் ஆலோசனைகள் பெறப்படவில்லை என்பது தெரியவருகின்றது.

# முரசின் விளையாட்டு செய்திகள்

## டெஸ்ட் தரவரிசையில் இந்தியா முன்னேற்றம்

சர்வதேச கிரிக்கட் வாரியம் சிறந்த டெஸ்ட் அணிகளுக்கான தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது. இப்பட்டியலில் ஐந்தாவது இடத்திலிருந்த இந்தி அணி நான்காவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சென்னையில் நடந்த டெஸ்ட் போட்டியில் இந்தி அணி வெற்றி பெற்றதையடுத்து 105 புள்ளிகளுடன் முன்னேறியுள்ளது. முதல் மூன்று இடங்களில் தென் ஆபிரிக்கா, இங்கிலாந்து அற்றும் அவுஸ்திரேலிய அணிகள் காணப்படுகின்றன.

## இல்ல மெய்வல்லுனர் போட்டிகளில் மரணிக்கும் வீர வீராங்கனைகள்

மாவனல்ல ரிவிசந்த மத்திய கல்லூரியில் கல்வி கற்ற ஹசனி அனுஷா என்ற பதினெட்டு வயது மாணவி ஐயாயிரம் மீற்றர் ஓட்டத்தில் கலந்து கொண்டபோது 26.02.2013 அன்று மாரடைப்பால் உயிரிழந்துள்ளார். சுமார் இருநூறு மீற்றர் தூரம் ஓடிய நிலையில் மைதானத்தில் விழுந்து ஹசனி அனுஷா உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறே கடந்த மாதம் 28.01.2013இல் மன்னார் பிரபல பாடசாலையொன்றின் வருடாந்த இல்ல விளையாட்டு உந்துருளிப் போட்டியில் கலந்து கொண்ட மாணவன் மயக்கமடைந்து உயிரிழந்திருந்தார்.

மேலும் 31.02.2013இல் சிலாபம் ஆனந்த தேசிய பாடசாலையின் மரதன் ஓட்டப்போட்டியில் கலந்துகொண்ட பத்தொன்பது வயதுடைய கௌசல்யா பவித்ராணி என்ற மாணவி வடிகானில் விழுந்து உயிரிழந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரியின் இல்ல மெய்வல்லுனர் போட்டி

திருக்கோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் 20.02.2013 கல்லூரி அதிபர் திருமதி. ஜோதிநாதன் தலைமையில் மக்கெய்சர் விளையாட்டரங்கில் இடம்பெற்றது. ஆசிரியர்கள் மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழு என்பன கலந்துகொண்ட ப்போட்டியில் பிரதம விருந்தினராக திருகோணமலை விக்னேஸ்வரா மகாவித்தியாலய முன்னாள் அதிபர் திரு. என். ராஜநாதன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



## வறிய மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் - யங் ஒலிம்பிக்ஸ்

திருக்கோணமலை யங் ஒலம்பிக் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை பகிர்ந்தளிக்கும் வைபவம் தி/சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயத்தில் கடந்த 27.02.2013 புதன்கிழமை அன்று காலை 8.30 மணியளவில் நடைபெற்றது. டாக்டர் திருமதி கௌசல்யாதேவி கோவிந்தபிள்ளை இக்கற்றல் உபகரணங்களை அம்மாணவர்களுக்-காக வழங்கியிருந்தார்.

இந்நிகழ்வில் காலை 8.30 மணியளவில் வைபவம் ஆரம்பித்திருந்த முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பிக்க இருந்த பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சரும். திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ சுசந்த புஞ்சிநிலமே அவர்கள் சனாதிபதியுடனான சந்திப்பு ஒன்றில் கலந்துகொள்ளச் சென்றிருந்தமையால் அவரது பாரியார் திருமதி லசிதா பெரேரா அவர்கள் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வின் தலைமையை தி/சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் திரு. வ. மகேஸ்வரன் அவர்கள் ஏற்று நடத்தியிருந்தார். விசேட விருந்தினராக கற்றல் உபகரணங்களை மாணவர்களுக்கு தந்துதவிய அகில இலங்கை சமாதான நீதவானும், பணிப்பாளர் மனித உரிமைகள் சமூகசேவைகளும் ஆன தேசபந்து லங்காமணி டாக்டர் திருமதி கௌசல்யாதேவி கோவிந்தபிள்ளை அவர்களும், அழைப்பு விருந்தினராக திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. ந. விஜேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். திருகோணமலை சாம்பல்தீவு மகாவித்தியாலயம், சல்லி அம்பாள் மகா வித்தியாலயம், ஆத்திமோட்டை தமிழ் வித்தியாலயம், ஸ்ரீ கோணலிங்கம் மகா வித்தியாலயம், நிலாவெளி தமிழ் மகா வித்தியாலயம், இரணைக்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கு இக்கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.



இந்நிகழ்வில் உரையாற்றிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிரபல அறிவிப்பாளர் திரு. ஜெகன்மோகன் அவர்கள் இவ்வாறான ஒரு கொடையைச் செய்வதற்கு என்று தனிமனம் படைத்த உயர்ந்தவர்களாலேயே முடியும் என்றும் அது டாக்டர். கௌசல்யாதேவி போன்ற ஒரு சிலராலேயே கைகூடக்கூடியது என்றும் தெரிவித்திருந்தார். அத்தோடு இப்பணி மேலும் தொடரும் என்றும் இம்மாவட்டத்தின் ஏனைய பாடசாலை-களுக்கும் இவ்வாறு வழங்கத் திட்டமிட்டிருப்பதாகவும் கூறியிருந்தார்.

இவ்விழாவில் பாடசாலை அதிபர் ஆசிதியர்கள், மாணவர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர், பழைய மாணவர்கள், அக்கிராமத்துப் பிரமுகர்கள், நலன் விரும்பிகள், ஏனைய பயன்பெறும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் யங் ஒலம்பிக் விளையாட்டுக் கழக செயலாளரும் ஏற்பாட்டாளருமான திரு. ரீ. சிவராசா மற்றும் அக்கழக உபசெயலாளர், பொருளாளர், உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.





# ஜெனீவாவில் ஒலித்தது திருமலையின் இரட்டைக் கொலைகள்

ஜெனீவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனிதவுரிமைச் சபையின் கூட்டத்தொடரில் திருக்கோணமலையின் இரட்டைக் கொலைகள் தொடர்பான விசாரணைகள் நடாத்தப் பட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

திருமலை நகரையே அதிரவைத்த எத்தனையோ கொலைகளுள் சர்வதேசத்தின் கண்களுக்குள் சிக்கிக்கொண்ட கொலைகளாக திருமலைக் கடற்கரையில் கொல்லப்பட்ட ஐந்து பாடசாலை மாணவர்களின் கொலையும், மூதூரில் கொல்லப்பட்ட பதினேழு அக்ஸன் பெய்ம் தொண்டு நிறுவனத் தமிழர்களின் கொலையுமே இவ்வார ஜெனீவாக் கூட்டத் தொடரில் ஒலித்த கொலைகளாக உள்ளன.

மாசி மாதம் 27ம் திகதி தனது உரையை மனிதவுரிமைச் சபையில் ஆற்றுவதற்காகக் களம் புகுந்த இலங்கையின் அமைச்சர் மகிந்த சமரசிங்க இக் கொலைகள் தொடர்பாக தனது அறிக்கையில் விளித்துள்ளார்.

இலங்கையில் நல்லிணக்கத்தை இனங்களிடையே ஏற்படுத்துவதற்குக் கால அவகாசமும் வாய்ப்பும் தமக்குத் தரப்பட வேண்டும் என்ற அடிப்படைக் கருத்தியலில் தனதுரையைத் தொடர்ந்த அமைச்சர் இவ்விரு கொலைகள் தொடர்பான அரசின் பதிலைச் சபைக்குத் தெரிவித்துள்ளார்.

“இவ்விரு கொலைகள் தொடர்பாகவும் விசேட நிபணத்துவம் பெற்ற காவல்த்துறை அலுவலர்கள் விசாரணைகளை முடுக்கியுள்ளனர். இவர்கள் குற்றவியல்ச் சான்றுகளையும் தடயங்களையும் ஆராய்ந்து முடிவுகளை முன்மொழிவதுடன் அவை தொடர்பான ஆவணங்களையும் ஆராயும் வல்லமை பெற்றவர்கள். அவர்களின் விசாரணைமுடிவில் இக் கொலைகள் தொடர்பான உண்மைநிலையைக் கண்டு கொள்ளலாம். இவ்விரு



கொலைகள் தொடர்பான குற்றங்களை நிறுவிக்கொள்ளும் இலங்கை அரசின் முனைப்பானது உரிய அரச அமைப்புக்களின் ஊடாகத் தொடர்ந்த வண்ணமேயுள்ளது. இச் சபையில் என்னால் கூறக்கூடியது என்னவென்றால் அந்த ஐந்து மாணவர்களின் கொலை தொடர்பாக வழக்குரைஞர் நாயகம் ( அர்ரோனி ஜெனரல்) காவல்துறையினருக்கு ஒரு அறிவித்தலைச் செய்துள்ளார். அவ்வறிவித்தலின் படி நீதித்துறை அலுவலர்களின் விசாரணைகளுக்கு முன்னதாக காவல்த்துறையினரை விரிவான விசாரணைகளை முன்னெடுக்கும்படிக் கேட்டுள்ளார்.

இதனால் இவ்விடயம் ஒரு முடிவிற்குக் கொண்டுவரப்படலாம் என்பதுடன் இவ்வாறான செயற்பாடுகள் அனைத்தும் இலங்கைப் பொறுப்புக் கூறுதலில் தனது கடமைச் சரிவரச் செய்வதற்கான சான்றாகவே உள்ளது” என்றும் அமைச்சர் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ வினியோகத்தர்கள் - திருமலை நகர லியோ கழகத்தினர்
The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 02. 03. 2013ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.